பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 04 புதன்கிழமை 20.07.2022 கதிர் 257

### இது ரகசியம் அல்ல!

தான் தீர்மானித்த முடிவை எப்படியும் அழுத்தமாகக் கட்சிக்குள் செலுத்தியாக வேண்டும் என்ற பிடிவாதம் கருதி சுமந்திரன் நாடிய வழிமுறை 'பூமராங்' ஆகியிருக்கிறது.

வழமையாக ஒரு நாட்டின் தேர்தல் விடயங்களில் ☞2

# சுமந்திரனின் நடவடிக்கையால் பெரும் இராஜதந்திர நெருக்கடி

## இந்தியத் தரப்பு மீது ரணில் கடும் சீற்றம் புதுடில்லியிடம் ஆட்சேபிக்கவும் திட்டம்

கொழும்பு, ஜூலை 20

இலங்கையின் ஜனாதிபதி தேர்தல் விடயத்தில் இந்திய இராஜதந்திரத்தை நேரடியாக உள்ளே இழுத்து விட்டார் எனக் கூறப்படும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனின் நடவடிக்கையால் பெரும் இராஜதந்திரக் குழப்பம் ஏற்படும் சூழல் நேர்ந்திருக்கின்றது. ☞11



நேரில் வழங்கிய உழிறுதிமொழியையடுத்து

## கூட்டமைப்பினரும் டலஸுக்கு ஆதரவு!

சுமந்திரன் எம்.பி. தகவல்



நாடாளுமன்றத்தில் இன்று நடைபெறவுள்ள புதிய ஜனாதிபதித் தெரிவுக்கான வாக்கெடுப்பின்போது டலஸ் ☞11

## நாடாளுமன்றச் சுற்றாடல் வீதியில் ஆர்ப்பாட்டங்களை நடத்தத் தடை



நாடாளுமன்ற வீதியில்ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கு தடை விதித்து கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் உத்தரவு ☞11

## சு.கவின் 9 எம்.பிக்கள் டலஸுக்கு நேசக்கரம்

ஒருவர் ரணிலுக்கு ஆதரவு

புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பின் போது, டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவு வழங்குவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது. ☞11

## மனோ - ஹக்கீம் - ரிஷாத் அணிகள் டலஸுக்கு வாக்களிக்கத் தீர்மானம்

கொழும்பில் நேற்று மாலை ஒன்றுகூடி முடிவு



பலத்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் நாடாளுமன்றத்தில் இன்று நடைபெறவுள்ள புதிய ஜனாதிபதித் தேர்தலில் டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவாக வாக்களிக்கத் தமிழ் முற்போக்குக்கூட்டணிதீர்மானித்துள்ளது.


கட்சியின் தலைவர் மனோ கணேசன் இதனை ☞11

## விமல், கம்மன்பில, வாசு டலஸுக்கு முழு ஆதரவு



புதிய ஜனாதிபதிப் பதவிக் கான வாக்கெடுப்பில் வேட்பாள ரான நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவுக்கு ☞11

## இலங்கையின் இக்கட்டுக்கு உதவ அமெரிக்கா தயாராம்



இலங்கையில்ஏற்பட்டுள்ளபொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு அமெரிக்கா உதவ தயாராகவுள்ளதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோக பூர்வ ருவிட்டர் ☞11

## மின் கட்டணம் ஓகஸ்ட் முதல் 69 சதவீதத்தால் அதிகரிப்பு!

எதிர்வரும் ஓகஸ்ட் மாத தொடக்கத்தில் இருந்து மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படும் என பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க ☞2

## பாடசாலைகளுக்கு 25 ஆம் திகதி வரை விடுமுறை நீடிப்பு

அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற அனைத்துத் தனியார் பாடசாலைகளுக்கான விடுமுறை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, எதிர்வரும் ஜூலை 25ஆம் திகதி ☞2

## முன்பிருந்த கோட்டாபய அரசு உண்மைகளை மூடிமறைத்தது

பதில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

இலங்கையின் இதற்கு முன்பிருந்த அரசாங்கம் நிதி நெருக்கடி பற்றிய உண்மைகளை மூடிமறைத்ததாக பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். ☞2

## வாக்குச் சீட்டுகளை படம் எடுக்கத் தடை

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது வாக்குச் சீட்டுகளைப் படம் எடுக்கக் கூடாது எனவும், ஜனாதிபதித் தேர்தலில் எந்தவொரு குறிப்பிட்ட வேட்பாளருக்கும் வாக்களிக்குமாறு ☞11

## சஜித், சம்பந்தன், மைத்திரி அணிகளின் எம்.பிக்கள் பலர் ரணிலுக்கே பேராதரவு



இது இரகசிய வாக்கெடுப்பு; வெற்றி உறுதி என்கிறார் ஹரின்

புதிய ஜனாதிபதித் தேர்தலுக்கான இன்றைய நாடாளுமன்ற வாக்கெடுப்பில் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே வெற்றியீட்டுவார்.

- இவ்வாறு அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், இது ஓர் இரகசிய வாக்கெடுப்பு. ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய கட்சிகள் டலஸ் அழகப் பெருமவுக்கு வாக்களிக்கத் ☞2

## ரணிலுக்கே நான் ஆதரவு

அரவிந்குமார் அறிவிப்பு



புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக இன்று நடைபெறும் வாக்கெடுப்பின் போது, ரணில் ☞11

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இன்னொரு நாடு தலையிடுவது இராஜதந்திர நெருக்கடிகளைக் கொண்டு வரும். 2015 தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ விழுத்தப்பட்டமையையொட்டி இந்தியா மீது மஹிந்தருக்குக் கடும் கடுப்பு இருந்தது தெரிந்த விடயம்தான்.

எனினும், ஒரு நாட்டில் இன்னொரு நாடு இப்படிப் பங்களிப்பது தவிர்க்க முடியாத இராஜதந்திரப் போக்குதான். ஆனால் யாருடன் அதைக் கையாளுவது என்பதில் இராஜதந்திரிகள் கவனமாக இருக்க வேண்டும். இராஜதந்திரிகளோடு விடயங்களைக் கையாளுபவர்களும் அதீத கவனமாக இருக்க வேண்டும். சுமந்திரன் தவறிழைத்து விட்டார் என்றுதான் நான் நினைக்கிறேன்.

கூட்டமைப்பின் கட்சித் தலைவர்களை வெளியில் வேறு ஏதேனும் வழியில், சம்பந்தப்பட்ட வட்டாரங்களோடு தொடர்பு கொள்ளும்படி வழிபடுத்தி இருக்கலாம். அவசரப்பட்டு அழைப்பு எடுத்திருக்க தேவையில்லை. மறுபுறத்தில் அழைப்பைப் பெற்றவருக்கும் இந்தப் பக்கத்தில் உள்ள நிலைமை தெரிந்திருக்காது.

எது, எப்படி என்றாலும் கசப்புணர்வை ஏற்படுத்தும் விடயங்கள் நடந்து விட்டன. இனி என்ன? செய்திகளை வெளியிட்ட ஊடகங்கள் மீது காய வேண்டியதுதான். மறுப்புகள் எல்லா மட்டங்களிலிருந்தும் வரும்.

ஆனால் நேற்றுச் சம்பவம் நடைபெறும் போது பதில் ஜனாதிபதியாக இருந்த ரணில் விக்கிரமசிங்கவிடம் இந்த மறுப்புக்கள் செல்லுபடியாகுமோ தெரியவில்லை.

ஆனால் ஒரு விடயம் நிச்சயம். கூட்டமைப்புக்குள் ரணிலின் வலுவான கை அல்லது செவி இருக்கின்றது. ஒரு பத்திரிகையாளராக ரணிலிடம் பேசினால் கூட்டமைப்புக் கூட்டத்தில் பரிமாறப்பட்ட அரைவாசி விடயங்கள் அவரிடம் இருந்தே அறிந்து கொள்ளக் கூடிய நிலைமை இருப்பதை நேற்றிரவு அவருடனான சில நிமிட தொலைபேசி உரையாடலில் உணர்ந்து கொண்டேன்.

கூட்டம் நடைபெற்றது சம்பந்தனின் வீடு. அவர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் கையளிக்கப்பட்டது. அங்கு நடப்பவற்றை காதை தீட்டிக் கொண்டு கேட்கும் தொலைவில் தான் ரணில் உள்ளார் என்பது புரிந்தது.

இத்தகைய இராஜதந்திரக் கீறல்கள் அவ்வப்போது வரும். அவை தவிர்க்க முடியாதவை. ஆனாலும் தன்னுடைய அரசியல் எதிர்காலம் பற்றிய விடயத்தில் இப்படி சின்னத்தனமாக விளையாடுவதை ரணில் சாதாரணமாக எடுத்துக் கொள்வார் என நான் நினைக்கவில்லை. அவரின் 'நொன்சென்ஸ்' என்ற சொல்லின் அழுத்தம் எனக்குப் புரிந்தது. ஏற்படக்கூடிய இராஜதந்திர சிக்கலுக்குள் நான் மாட்டிக் கொள்ள விரும்பவில்லை. ஆகையினால் விடயத்தை ஆழமாக ஆராயாமல் விட்டுவிடுகிறேன்.

ஒரு விடயம் மட்டும். சுமந்திரனுக்கு அரசியல் முதிர்ச்சி இன்னும் வர வேண்டும். அவரும் சாணக்கியனும் 'கோட்டா கோ கமே' இளைஞர்களோடு மிக நெருங்கி விட்டமையால் அந்த இளைஞர்களின் துடிப்பும் அவசரமும் இந்த இருவரிலும் அதிகம் தொற்றிக் கொண்டு விட்டது போலும்.

எனினும் அரசியல் முதிர்ச்சிக்கு சம்பந்தரிடம் இருவரும் பாடம் கற்பது நல்லது.

இந்தத் தேர்தல் பற்றி சம்பந்தரிடம் நாம் கேட்டபோது "அவர்கள் தங்களுக்குள் மோதிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது நாங்கள் கருத்து தெரிவித்தால் அது ஒரு தரப்புக்கு சாதகமாகவும் இன்னொரு தரப்புக்கு பாதகமாகவும் மாறி விடும். ஆகவே மௌனம் பேண விரும்புகிறேன். சமயம் வரும் போது முடிவு எடுத்து அறிவிக்கலாம்" – என்ற சாரப்பட சம்பந்தர் பதில் தந்தார். ஆனால் சுமந்திரன் தன்பாட்டில் முந்திக்கொண்டு ரணிலைத் தாக்கி, சஜித் அணியைப் பாராட்டி ஒற்றை காலில் நின்று அறிக்கைகள், அறிவிப்புகளை வெளியிட்டுக் கொண்டிருந்தார்.

இப்போது கூட்டமைப்புக் கூட்டத்தில் நடைபெற்ற விடயத்தை தங்களுக்கு லாபமாக பயன்படுத்தி இன்று காலை தேர்தலுக்கு முன்னரே நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வாதப்பிரதி வாதங்கள் கொடிகட்டிபறக்கும். அதன் பாதிப்புகள் தேர்தலிலும் எதிரொலிக்கும்.

சம்பந்தன் போல் அதிகம் பேசாமல் வாய் மூடி இருந்தால் பல விடயங்களைச் சமாளிக்கலாம்.

– மின்னல் –

## பாடசாலைகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

திங்கட்கிழமை குறித்த பாடசாலைகள் மீளத் திறக்கப்படும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

முன்னதாக எதிர்வரும் 21ஆம் திகதி பாடசாலைகளை மீளத் திறக்கத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும், எரிபொருள் மற்றும் போக்குவரத்து நெருக்கடிகளைக் கருத்தில் கொண்டு கல்வி அமைச்சின் தீர்மானத்துக்கமைய விடுமுறை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

## முன்பிருந்த கோட்டா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சி.என்.என் செய்திச்சேவைக்கு அளித்த செவ்வியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கம் உண்மையைச் சொல்லவில்லை. இலங்கைக்கு ஐந்து வருடங்கள் அல்லது பத்து வருடங்கள் தேவையில்லை. அடுத்த ஆண்டு இறுதிக்குள் ஸ்திரத்தன்மையை அடையும் நகர்வு ஆரம்பமாகும். நிச்சயமாக 2024- க்குள் செயல்படும் பொருளாதாரம் வளர்ச்சியடைய ஆரம்பிக்கும்.

இலங்கையிலிருந்து மாலத்தீவுக்குத் தப்பிச் சென்ற ராஜபக்ஷ பின்னர் சிங்கப்பூர் சென்றதில் இருந்து தம்முடன் உரையாடினார். எனினும் அவர், இன்னும் சிங்கப்பூரில் இருக்கிறாரா அல்லது வேறு எங்காவது இருக்கிறாரா என்பது தனக்குத் தெரியாது என்று விக்கிரமசிங்க கூறினார்.

இதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்றம் தமது கடமையை நிறைவேற்றுவதற்கு இடையூறு விளைவிக்க வேண்டாம் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

## மின் கட்டணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள மின்சாரக் கட்டணம் 69 சதவீதத்தால் அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மின்சார சபை 130 சதவீத கட்டண உயர்வை கோரிய போதிலும், குறைந்த மின்சார பாவனையாளர்களுக்கு சலுகைகளை வழங்கி இந்த கட்டண உயர்வு அமுல்படுத்தப்படும் எனவும் ஜனக ரத்நாயக்க மேலும் தெரிவித்தார்.

## சஜித், சம்பந்தன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தீர்மானித்த போதிலும் அக்கட்சிகளின் எம்.பிக்கள் பலர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு முழு ஆதரவை வழங்கி வாக்களிப்பதாக உறுதியளித்துள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்ற தன் பின்னர் சர்வகட்சி அரசை உருவாக்குவார் – என்றார்.

பனைத் தொழில் பழகு..



கரும்பனையேற்றம் பழகி பனைத் தொழில் வல்லுனராக வேண்டுமா?

பதநீர் மற்றும் பனங்கள் உற்பத்தியாளர்களிற்கான பயிற்சி

இந்திய மற்றும் உள்ளூர் துறைசார் வல்லுனர்களினால் நவீன உபகரணங்களைப் பயன்படுத்தியும் பாதுகாப்பான முறையில் பாரம்பரியமாகவும் பதநீர் மற்றும் பனங்கள் உற்பத்தியாளர்களிற்கான பயிற்சிநெறியினை யூலை இறுதி வாரத்திலிருந்து நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி நெறியின் பிரதான உள்ளடக்கங்கள்

- பனை ஏறுதல் (பாரம்பரிய முறை மற்றும் கருவிகள் மூலமான எளிய முறைகள்)
- பனை மரத்தினை சுத்தம் செய்தல்
- பனம் பாளைகளை பக்குவப்படுத்தி பதநீர் மற்றும் கள் இறக்குதல்
- பதநீரில் இருந்து பெறுமதிசேர் பொருட்களின் உற்பத்தி
- பனையோலை பின்னல் பயிற்சி



அனுமதி - இலவசம்

| மட்டக்களப்பு | மன்னார் | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 26.07.2022 - 28.07.2022 | 29.07.2022 - 31.07.2022 | 01.08.2022 - 03.08.2022 |

பனைசார் உணவு உற்பத்தியும் தரக்கட்டுப்பாடும்

பனை ஆராய்ச்சி நிறுவனம், பனை அபிவிருத்திச் சபை, இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையுடன் (VTASL) இணைந்து நடாத்தும் பனைசார் உணவு உற்பத்தியும் தரக்கட்டுப்பாடும் NVQ மட்ட 6 மாதகால கற்கை நெறி.

நேரடி விளக்க வகுப்புகள் மற்றும் கள விஜயங்கள்

பயிற்சி முடிவில் VTA தரச்சான்றிதழ் வழங்கப்படும்.



- அனுமதி - இலவசம்
- பயனாளர்கள் - பயிற்சிநெறி ஒன்றிற்கு 20 பேர் மட்டுமே. சிறிய நடுத்தர தொழில் முனைவோர் மற்றும் ஆர்வமுள்ளோர் பங்குபெறலாம்.

HACCP சார் உணவு பாதுகாப்பு முகாமைத்துவ கற்கைநெறி

ஜேர்மன் தொழிற்பயிற்சி நிறுவகம், பனை ஆராய்ச்சி நிறுவனம், பனை அபிவிருத்திச் சபை இணைந்து நடாத்தும் மேற்படி கற்கை நெறி இரு மாத காலங்களிற்கு நடாத்தப்படவுள்ளது.



- பயிற்சி நெறி கட்டணம் - 15,000.00
- பயனாளர்கள்: சிறிய, நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் மற்றும் ஆர்வமுள்ளோர்.

உணவுற்பத்தி பொருட்களிற்கான தரநிர்யண ஆய்வுகூட அறிக்கைகளை வழங்குதல்

பனைசார் மற்றும் பனை சாரா உள்ளூர் உற்பத்திப் பொருட்களிற்கான

- நிறக்குறியீடு
- போசனை உள்ளடக்கங்கள்
- தரக் கட்டுப்பாட்டு அளவீடுகள்



போன்றவற்றுக்கான தரநிர்ணய அறிக்கைகளை பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் இலங்கை தரக்கட்டளை நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட இரசாயன மற்றும் நுண்ணுயிரியல் ஆய்வுகூடங்களில் இருந்து கட்டணங்களைச் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.

பனை ஆராய்ச்சி நிறுவகத்தின் ஆராய்ச்சி முடிவுகளின் மூலம் பெறப்படும் புதிய பனைசார், பெறுமதி சேர் உற்பத்திகளிற்கான பயிற்சிகளினை தொழில் முயற்சியாளர்கள், எவரேனும் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

| | | | |
|---|---|---|---|
| மாசி | - பங்குனி | - | பனங்கிழங்கிலிருந்து உற்பத்திகள் |
| மாசி | - வைகாசி | - | பதநீர், பனங்கள் சார் உற்பத்திகள் |
| வைகாசி | - ஆனி | - | நுங்கு சார் உற்பத்திகள் |
| ஆவணி | - கார்த்திகை | - | பனங்களி சார் உற்பத்திகள் |

மேலதிகமாக எமது புதிய கண்டுபிடிப்புகளுக்கான உற்பத்தி மற்றும் விற்பனை உரிமத்தினை தனிநபர் மற்றும் பங்குதார நிறுவனங்களிற்கு ஒப்பந்த அடிப்படையில் கட்டணம் செலுத்தி எம்மிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

திரு. எஸ். ஸ்ரீவிஜேந்திரன்,
பிரதிப்பொது முகாமையாளர் மற்றும்
முகாமையாளர் ஆராய்ச்சி மற்றும் தரக்கட்டுப்பாடு,
பனை ஆராய்ச்சி நிறுவனம், பனை அபிவிருத்திச் சபை, கைதடி.

மேலதிக தகவல்களுக்கு
பனை ஆராய்ச்சி நிறுவகம், கண்டி வீதி கைதடி
தொ. பே. இல: 021 205 7065 / 077 378 7380




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# கூத்தமைப்பின் முடிவு

இலங்கைத் தீவின் எதிர்கால செல்நெறி – போக்கு – எந்தத் திசையில் அமையப் போகின்றது என்ற தலைவிதி இன்று எழுதப்படப் போகின்றது.

இன்று முற்பகல் நாடாளுமன்றத்தில் நடைபெறப் போகும் வாக்கெடுப்பில் சபாநாயகர் உட்பட 225 எம்.பிக்களும் அளிக்கும் வாக்குகள் மூலம் அடுத்த இரண்டே கால் ஆண்டுகளுக்கு இலங்கையை வழி நடத்தப்போகின்ற நிறைவேற்றதிகார ஜனாதிபதி யார் என்பது தெரிவு செய்யப்படவிருக்கின்றது.

களத்தில் மூன்று வேட்பாளர்கள். பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிரணியின் பிரதான வேட்பாளர் டலஸ் அழகப்பெரும மற்றும் ஜே.வி.பி. தலைவர் அநுர குமார திஸநாயக்கா ஆகியோர் போட்டியிட்டாலும் நேரடிப் போட்டி என்னவோ, ரணிலுக்கும் டலஸ் அழகப்பெருமவுக்கும்தான்.

இந்தத் தேர்தலில் ஒரு வேடிக்கை. மொட்டுக்கு யானை தலைமை தாங்குகின்றது. யானைக்கு மொட்டு தலைமை வகிக்கின்றது.

சிறிலங்கா பொதுஜன பெரமுன என்ற மொட்டுக் கட்சி யானைக் கட்சித் தலைவரான ரணிலைத் தனது ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்கியுள்ளது.

அதேவேளை முன்னாள் யானைக் கட்சியான ஐ.தே.கட்யினருக்கு – இப்போதைய தொலைபேசிச் சின்ன அணியினரான ஐக்கிய மக்கள் சக்தியினருக்கு – மொட்டுக் கட்சியைச் சேர்ந்த டலஸ் அழகப்பெரும ஜனாதிபதி வேட்பாளராகத் தலைமை வகித்துக் களமிறங்குகின்றார்.

வழமைபோல, ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகும் முயற்சிக்கு ஆப்பு வைக்கும் தன்வேலையை தமிழர் தரப்பு ஆரம்பித்து விட்டது.

ரணில் விக்கிரமசிங்க முதலில் எதிர்கொண்ட ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீது விடுதலைப் புலிகள் கடைசி நேரத்தில் தற்கொலைத் தாக்குதலை நடத்தி, சந்திரிகாவைப் படுகாயப்படுத்தி, தென்னிலங்கை மக்களின் பெருவாரியான – அனுதாப வாக்குகளை – சந்திரிகா பக்கம் திருப்ப வைத்து, ரணிலைத் தோற்கடித்தனர்.

2005 நவம்பரில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரசிங்கவுக்கு வாக்களிக்கத் தமிழ் மக்கள் திரண்டு தயாரான போது, விடுதலைப் புலிகள் அதைத் தமது தீர்மானம் மூலம் தடுத்து, மக்களை வாக்களிக்க விடால் தடுத்து, ரணிலைத் தோற்கடிக்கச் செய்து, மஹிந்த ராஜபக்ஷவை வெல்ல வைத்துத் தங்கள் தலையில் தாங்களே மண் அள்ளிப் போட்டு, தங்கள் புலிகள் இயக்கமே அழியக் காரணமாகினர்.

அந்த வேலைதான் மீண்டும் நடக்கின்றது. சரித்திரம் திரும்புகின்றது.

ரணிலை வீழ்த்தும் சுமந்திரன் அணியின் பகீரதப் பிரயத்தனம் வெற்றி பெறுமா என்பது இன்று மதியம் தெரியும்.

இதில் இரண்டு விடயங்கள்.

ஒன்று – கூட்டமைப்பின் இந்தத் தீர்மானத்தின் பின்பு லத்தில் அந்நியத் தரப்பு ஒன்றின் நேரடி வழிகாட்டல் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

அடுத்தது – விமல் வீரவன்ஸ, உதயகம்மன்பில்ல, வாசுதேவ, சம்பிக்க போன்ற தீவிர இனவாதிகள் கொண்ட அணியுடன்தான் கூட்டமைப்பும் அணி சேரத் தீர்மானித்திருக்கின்றது.

புலிக்கு ஏற்பட்ட அனுபவம் – முடிவு – ஏற்படாமல் இருந்தால் சரி.

# கோட்டாபயவை விடவும் ரணில் பாரிய தோல்வியை சந்திப்பார்!

## ஐ.தே.கவும் அவரால் அழிவடையும் என ஹிருணிகா ஆரூடம்



ராஜபக்ஷக்களை பாதுகாப்பதற்காகச் செயற்பட்டு வரும் ரணில் விக்கிரமசிங்க , கோட்டாபயவை விட பாரிய தோல்வியை சந்திப்பார் என்பதோடு, அதனால் ஐக்கிய தேசிய கட்சியும் முழுமையான அழிவை சந்திக்கும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

ராஜபக்ஷக்களைப் பாதுகாப்பதற்காக செயற்பட்டு வரும் ரணில் விக்கிரமசிங்க, கோட்டாபய ராஜபக்ஷவை விட மோசமான தோல்வியை சந்திப்பார்.

அவர் மாத்திரமன்றி இலங்கையில் மிகப் பழைய வரலாற்று முக்கியத்துவம் பெற்ற ஐக்கிய தேசிய கட்சியும் அழிவடையும்.

நாட்டு மக்கள் போராட்டங்களைக் கை விடப் போவதில்லை. இந்த ஆர்ப்பாட்டங்களின் இறுதி இலக்கு நாட்டை கட்டியெழுப்புவதாக அமைய வேண்டுமே தவிர, வன்முறையாக இருக்கக் கூடாது.

ரஞ்சன் ராமநாயக்கவிற்கு பொது மன்னிப்பு வழங்கத் தீர்மானித்துள்ளமை சிறந்த விடயமாகும். அதனை சஜித் பிரேமதாஸ பல சந்தர்ப்பங்களில் வலியுறுத்தியிருக்கின்றார்.

இதனை செய்வதன் மூலம் ரணில் விக்கிரமசிங்க பொது மக்கள் மத்தியில் தன்னைப் பற்றிய சிறந்த தோற்றப்பாடுகளை உருவாக்குவதற்கு முயற்சிக்கின்றார்.

எரிபொருள் விலைகளை 10 ரூபாவால் குறைக்கின்றனர் என்பதற்காகவும், அதனைப் பெற்றுக் கொள்ள புதிய முறைமையை நடைமுறைப்படுத்துகின்றனர் என்பதற்காகவும் அவரை ஆதரிக்க முடியாது. – என்றார்.

# அதிகரிக்கப்பட்ட பஸ் கட்டணங்களை நிபந்தனையுடன் குறைப்பதற்குத் தயார்!

## தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் அறிவிப்பு



எரிபொருள் விலை குறைப்புக்கு அமைய பஸ் கட்டணத்தையும் குறைப்பதற்கு தயார். ஆனால் பஸ்களுக்குத் தேவையான எரிபொருள் தொடர்ந்து வழங்கப்படவேண்டும் என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்களின் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

அரசாங்கம் எரிபொருள்களின் விலையைக் குறைத்திருக்கின்றது. விலை சூத்திரத்துக்கு அமைய அதன் நன்மையை நாட்டு மக்களுக்கு வழங்குவதற்கு நாங்கள் தயார். ஆனால் தனியார் பஸ்களுக்கு முறையாக நாளாந்தம் தேவையான எரிபொருள் வழங்கப்படவேண்டும். இலங்கை போக்குவரத்து டிப்போக்களில் வரையறுத்தே எமக்கு எரிபொருள் வழங்கப்படுகின்றது.

நாள் ஒன்றுக்கு 40 தொடக்கம் 90 லீற்றர் வரை பெற்றுக்கொள்ள நாங்கள் 3 நாள்கள் வரிசையில் இருக்கவேண்டி இருக்கின்றது.

அத்துடன் குறைக்கப்பட்டிருக்கும் எரிபொருள் விலைக்கு அமைய நூற்றுக்கு 4 வீதத்துக்கு அதிகம் பஸ் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ளலாம் என எதிர்பார்க்கின்றோம். ஆனால் எமக்குத் தேவையான எரிபொருளை முறையாக வழங்கினால் மாத்திரமே பஸ் கட்டணம் குறைப்பதற்கு நாங்கள் இணக்கப்பாட்டுக்கு வருவோம்.

எரிபொருள் முறையாகக் கிடைக்காதமையால் தனியார் பஸ்கள் மிகவும் குறைவாகவே போக்குவரத்து சேவையில் ஈடுபட்டு வருகின்றன. அதனால் பஸ்ஒன்றில்பயணிகளை எடுத்துச்செல்லக்கூடிய எண்ணிக்கைக்கும் பார்க்க அதிகம் ஏறுவதால் பஸ்களுக்கும் பாதிப்புகள் ஏற்படுகின்றன. இது பாரிய பிரச்சினையாகும். – என்றார்.

இதேவேளை கடந்த ஞாயிற்றுக்கிழமை தனியார் பஸ்கள் அதிகளவில் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் என தெரிவிக்கப்பட்டிருந்தபோதும் அன்று மிகவும் குறைந்தளவிலேயே ஈடுபட்டிருந்தன. அதனால் பயணிகள் மிகவும் கஷ்டங்களுக்கும் முகம்கொடுத்திருந்தனர்.

சில பிரதேசங்களுக்கான பஸ் சேவை காலை நேரத்தில் மிகவும் குறைவாக இருந்தமையால் மக்கள் அதிகளவில் பஸ் தரிப்பு நிலையங்களில் காத்துக்கொண்டிருந்தமையைக் காணக்கூடியதாக இருந்தது.

# மன்னார் மீனவரின் சடலம் மீட்கப்பட்டது

(ந. லோகதயாளன்)

மன்னார் பியர் பகுதியில் இருந்து கடந்த 14 ஆம் திகதி கடல் தொழிலிற்குச் சென்ற மூவரில் இருவர் தமிழக மீனவர்களால் உயிரோடு மீட்கப்பட்டபோதும் உயிரிழந்தார் என கருதப்பட்ட மூன்றாவது மீனவர் சடலமாக மீட்கப்பட்டார்.

இதன்போது இராயமூர்த்தி என்னும் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த (வயது 52) மீனவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.


மன்னார் மாவட்டம் பியர் பகுதியில் இருந்து கடந்த 14 ஆம் திகதி பகல் ஒரு மணிக்கு தொழிலிற்குச் சென்ற படகில் மூவர் பயணித்த நிலையில் படகு பழுதடைந்த காரணத்தால் மூவரும் தம்மை படகுடன் கட்டியுள்ளனர். இவ்வாறு கட்டியிருந்தவர்களை இந்திய ட்ரோலர் படகு அவதானித்து உயிருடன் இருந்த இருவரையும் 16 ஆம் திகதி மீட்டு 17 ஆம் திகதி கச்சதீவுப் பகுதியில் தரையிறக்கிச் சென்றனர்.

இவ்வாறு கச்சதீவிற்கு அருகில் கடலில் குதித்து கரையேறிய மோகன்ராஜ், ஜெனார்த்தனன் ஆகிய இரு மீனவர்களையும் கடற்படையினர் மீட்டு மன்னார் அழைத்து வந்து உறவுகளிடம் ஒப்படைத்தனர்.

இதேநேரம் படகில் உயிரிழந்த மீனவரை மன்னாரில் இருந்து ஓர் படகு சென்று தேடிய போதும் உயிரிழந்தவரின் சடலம் கண்டுபிடிக்கப்படவில்லை.

இந்த நிலைமையில் கிளிநொச்சி மாவட்டம் நாச்சிக்குடாவை அண்டிய கடற்பரப்பில் மிதந்த படகை மீட்ட மன்னார் மீனவர்கள் அதிலிருந்த உயிரிழந்த மீனவரின் உடலையும் மீட்டுள்ளனர்.

# இல்லறத்தைத் துறந்தார் இன்பத்தமிழ் இணைத்தார்!



ஈழத்தின் கிழக்கில் தோன்றிய முத்து – தமிழைச் சுமந்தபடி தரணியெங்கும் ஒளிவீசி நின்றது. அந்த முத்தின் வாழ்க்கை இரு நிலைகளில் அமைந்தது. படித்துப் பட்டம் பெற்று – பண்டிதராய், கல்லூரி ஆசிரியராய், அதிபராய், தந்தை தாய் வைத்த மயில்வாகனன் என்னும் பெயரோடு சமூகத்தில் பயணித்த காலம். மயில் வாகனன் என்னும் பெயரைக் கடந்து –

‘ஊரும் சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுப் பெற்ற

பேருஞ் சதமல்ல பெண்டீர் சதமல்ல

என்னும் மனப்பாங்கினைப் பெற்று – ’என்கடன் பணி செய்து கிடப்பதே’ என்னும் விசாலித்த நோக்குடன் இராமகிருஷ்ண மடத்துடன் ஐக்கியமாகி, துறவியாகி – விபுலானந்தர் என்னும் அடையாளத்தைத் தனதாக்கி இவ்வுலகைவிட்டு ஏகும்வரை பயணித்த காலம் எனலாம். முத்தமிழ் வித்தகராய் முழுப் பேராளுமையாய் விளங்கிய எங்கள் விபுலாநந்தத் துறவியை இப்படியும் பார்க்கலாம் என்பதை மனமிருத்துவது அவசியம் என்று எண்ணத் தோன்றுகிறது.

காரைதீவு மண்ணில் பிறந்தவர் யாவர் மனத்திலும் இன்றும், என்றும் வாழ்ந்து கொண்டே இருக்கிறார் என்றால் – அதற்கு திருப்பு முனையான காலமாய் அமைந்தது முத்தமிழ் மாமுனிவரின் துறவறத்தின் பின்னான காலம் என்றே சொல்லலாம். 1924 ஆம் வருடம் மயில்வாகனனை மாநிலம் அறிந்திட மலரச் செய்த காலம் எனலாம். மயில்வாகனன் லண்டன் பல்கலைக்கழகத்தின் அறிவியல் பட்டதாரியாய், மேல்நாட்டு உடையுடன் மிடுக்குடன் இருந்த கோலம் மாறி – உடையாலும் , உள்ளத்தாலும். தாமரை இலை மேல் நீர் போன்ற நிலைக்குள் வந்து – துறவியாய் பிறப்பெடுத்த நாள் எனலாம்.

**வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ**
**வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ**
**வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல**
**உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது**

என்று சிந்திக்கும் நிலையினை அடைந்த காலம் தான் துறவுக்காலம் என்பதை முத்தமிழ் வித்தகரின் வார்த்தைகளே சான்று பகர்வதாய் இருக்கிறதல்லவா?

மயிவாகனன் விரும்பி இருந்தால் – அவருக்கு வாய்த்த வாய்ப்புகளைப் பயனாக்கி இல்லறத்தில் இணைந்து இகபோக இன்பங்களை இஷ்டமுடன் ஏற்றிருக்கலாம் அல்லவா? ஆனால் அவரைக் கருவில் உருவாக்கிய அந்த ஆண்டவனே அவரை அகிலத்துக்கும் ஆறுதல் அளிக்கும் வகையில் – துறவுக்குள் அவர் மனத்தை நாட வைத்துவிட்டான் என்று தானே எடுக்க வேண்டி இருக்கிறது. இல்லறத்தில் இணைந்திருந்தால் காரைதீவின் மைந்தன் மயில்வாகனன் குடும்பஸ்தனாகி குழந்தைகளுடன் குடித்தனம் நடத்தி சாதாரண மானவராகவே மறைந்திருப்பார். ஆனால் கிழக்கின் முத்தாய் ஒளி விட்டு எல்லோர் இதயத்திலும் பதிந்திருக்கிறார் என்றால் அதற்கு வழி வகுத்தது துறவுதான் என்பதை எவருமே மறுத்து உரைத்திட முடியாது.

சுந்தரரை இல்லறத்தில் இணைய விடாமல் எம்பெருமான் தடுத்தாட்கொண்டார். அரச போகத்தில் இருந்த சித்தார்த்த கெளதமர் இல்லறத்தை ஒதுக்கி இறைஞானம் பெற்றார். அதே போன்ற ஒரு நிலையினையே மயில்வாகனனுக்கும் கிடைத்தது எனலாம். எல்லாமே இறையருள் அல்லால் வேறென்றும் இல்லை என்றுதான் எண்ண வேண்டி இருக்கிறது.

ஆண்டவனின் பரிபூரணமான அனுக்கிரகத்தைக் கருவிலே தாங்கி வந்த காரணத்தால் அடிகளாகி, ஆசானாகி, பேராளுமையாய் பிரகாசித்து பயனுற வாழ்ந்தார் எனலாம். விஞ்ஞானம் படித்தவர் மெஞ்ஞானத்துள் மூழ்கிறார். தமிழை மூச்சாக்கி நிற்கின்றார். சமரச சன்மார்க்கத்தின் வழியில் பயணப்படுகிறார். ஆனால் சைவத்தைக் கைகளில் ஏந்துகிறார். இவையெல்லாம் துறவால் விளைந்த விளைவுகள் என்றே எடுத்துக் கொள்ளல் வேண்டும். துறவு வாழ்க்கை என்பது முத்தமிழ் வித்தகரின் பாதையில் வாய்த்த பெரும் பொக்கிஷம் என்றே கொள்ள வேண்டும்.

துறவறத்தின் பின்னர்தான் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதற் தமிழ்ப்பேராசியராகிறார். தமிழ் நாட்டில் தமிழ் அறிந்த பலபேர் இருந்தும் – ஈழத்து மைந்தனை எப்படித் தமிழ்ப் பேராளுமையாக அண்ணாமலைச் செட்டியார் கண்டுகொண்டார் என்றால் – அது தான் துறவறத்தின் பெருவெளிச்சம் எனலாம். பற்றுக்களையும் அறுக்கிறார். ஆனால், மொழியில், சமயத்தில், கலாசாரத்தில், பண்பாட்டில், ஆராய்ச்சியில், சமூகத்தொண்டில், இசையில், நாடகத்தில், கொண்ட பற்றுக்களை இழந்தாரில்லை. அவற்றில் அவரின் பற்றானது பல்கிப் பெருகி பயனளிக்கும் வகையில் அமைந்தது எனலாம். இவையாவும் துறவு வாழ்க்கையின் பின் துலங்கியது என்பது தான் மிகவும் முக்கியமாகும்.

நல்லைநகர் நாவலர் பிறந்திலரேல்

சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே

என்று போற்றப்படும் நாவலர் பெருமான் இல்லறத்தை விட்டு துறவுநிலையில் நைட்டிக பிரம்மசாரியாய் ஆனபின்தான் – அவரின் பணிகள் ஆல்போல் விருட்சமாகியது. வேதாசலம் – மறைமலையடிகள் ஆனதின் பின்தான் அவரின் பணிகள் துலங்கின. நாவலர்பெருமானை நல்ல அரசாங்க உத்தியோகத்தில் பார்த்திட அவர் குடும்பத்தார் விரும்பினார்கள். ஆங்கிலக்கல்வியைக் கற்ற ஆறுமுகமும் அக்காலத்தில் நல்ல உயர் பதவியில் அமர்ந்து இல்லறத்துள் புகுந்திருந்தால் – எல்லோரும் ஏற்றிப் போற்றும் நல்லை நகர் நாவலர் என்னும் பொக்கிஷம் எமக்குக் கிடைத்திருக்குமா? ஆறுமுகம் துறவுக்குள் சென்றதால்த்தான் – கந்தபுராண கலாசாரம் வந்தது. சைவம் பிழைத்தது. தமிழும் தளைத்தது எனலாம்.

முத்தமிழை மூச்சாக்கினார் அடிகளார். இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் எங்களின் சொத்துக்களாகும். பழந்தமிழ் இலக்கியங்கள் முத்தமிழினைப் போற்றியே நின்றன. பழந்தமிழ் இலக்கியங்களை இதயத்தில் இருத்திய அடிகளார் – பழந்தமிழ் இசையினை ஆராய முற்படுகிறார். இலக்கியத்தை, இலக்கணத்தை, வரன்முறையாகக் கற்றவர் அடிகளார். அதே வேளை பன்மொழிப் பாண்டித்தியமும், விஞ்ஞானப் புலமையும் மிக்கவர். குறிப்பாக பெளதிகத்தில் பேராளுமை உடையவர். தான்கற்ற பெளதிக அறிவை முன்னிறுத்தி பழந்தமிழ் இலக்கியத்தில் இருக்கின்ற இசையினை ஆராய முற்படுகிறார். அவரின் அளப்பெரும் ஆராச்சியால் வையம் பயனுற வாய்க்கிறது யாழ்நூல். யாழ் நூலினைத் தந்திட்ட முத்தமிழ் மாமுனிவரின் பேராற்றலை வியக்காதார் இல்லை எனலாம். எவருமே தொடாத துறை! எவருடைய ஆராய்ச்சிக்கும் எட்டாத துறை! அந்தத்துறையினைத் தொட்டிருக்கிறார் எங்கள் விபுலானந்தத் துறவி! இப்பேராய்ச்சி மலர்ந்ததும் முத்தமிழ் வித்தகரின் துறவின் பின்தான் என்பதும் மனங்கொள்ளத்தக்கதாகும்.

நரேந்திரன் விவேகானந்தர் ஆனபின் தான் இராமகிருஷ்ண அமைப்பே உருவாகிறது. வீரத்துறவியாய் அதேவேளை ஈரத்துறவியாய் பரிணமிக்கிறார். மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதை பல நிலையிலும் நிலை நிறுத்துகிறார். இந்த வழியினை எங்கள் முத்தமிழ் முனிவரும் மனத்தினில் பதிக்கிறார். முத்தமிழ் முனிவரும் விவேகானந்தர் எப்படி துறவறத்தின் பின் துலங்கினாரே அப்படியேதான் துறவுக்குப்பின் துலங்கி நின்றார் எனலாம்.

அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் முதல்தமிழ் பேராசிரியரான பின்னர் இலங்கை பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ் பேராசிரியராயும் அணி செய்கின்றார். கல்வியை , சமயத்தை – சமூகத்தைக் கருத்திருத்தி அவர் ஆற்றிய அத்தனை பெரும் பணிகளும் துறவுக்குப் பின்தான் என்பது தான் மனமிருத்த வேண்டிய கருத்தெனலாம்,

இலங்கையில் பல பகுதிகளில் கல்விக்கூடங்களை நிறுவினார். ஏழை மாணவர்களின் வாழ்வில் ஒளி விளக்கை ஏற்றிவைத்தார். இலக்கிய கட்டுரைகள், சமய சன்மார்க்கக் கட்டுரைகள், ஆராய்ச்சி நூல்கள், மாநாடுகள் பலவற்றில் பேருரைகள், என்றுமே பயன் தரும்வகையில் பல நயமிக்க, பொருள் பொதிந்த கவிதைகள், கவிதை நூல்கள், என்று பல்துறைகளில் – பன்முக ஆற்றல்களை வெளிப்படுத்திய காலம் முத்தமிழ் வித்தகரின் துறவுக்காலமேதான் என்பது தான் உண்மையாகும்.

ஐபத்து ஐந்து ஆண்டுகள்தான் அவருக்கு ஆண்டவன் கொடுத்த வாழ்வாகும். அதிலும் அவர் துறவில் வாழ்ந்த காலம் இருபத்து மூன்று ஆண்டுகளே. ஆனாலும் அந்தக்காலத்தில் போதித்ததோடு நின்றுவிடாமல் சாதித்தும் காட்டினார். நல்லவைகளை எல்லாம் அவர் விரும்பினார் ஏற்றுக் கொண்டார். அல்லவைகளை அவர் பார்த்தாரில்லை. அவற்றை நினைத்தாருமில்லை. அவரின் ஆக்கங்கள், அவரின் தொண்டுகள் என்றுமே எங்கள் மனத்தைவிட்டு அகன்றுவிடவே மாட்டாது.

அதனால்த்தான் அவருக்கு விழாக்கள் எடுக்கிறோம்! அவருக்குச் சிலை எடுக்கிறோம்! அவர்பற்றிய மலர்களையும் வெளியிடுகிறோம்! துறவு என்றால் காட்டுக்குள் ஓடுவதல்ல! துறவு என்றால் சமூகத்தைவிட்டு ஒதுங்கி நிற்பதும் அல்ல! துறவு என்றால் காவியை அணிந்து மொட்டை அடித்து மெளனமாய் குகைக்குள் புகுந்து இருப்பதும் அல்ல!

மக்கள் மத்தியில் வாழ வேண்டும். மக்களுக்கு ஏற்ற சேவைகளைச் செய்ய வேண்டும். மொழியை, பண்பாட்டை, கலாசாரத்தை, சமயத்தை, சன்மார்க்கத்தை, அறிவியலை, சமூகத்துக்கு எப்படியாயினும் கொடுக்க வேண்டும் என்பதை துறவின் வழியில் பயணப்பட்டே கொடுத்த பேராளுமையாய் விளங்குவர்தான் எங்களின் முத்தமிழ் வித்தகர் விபுலானந்த துறவி! அவரின் பெயரினை உச்சரிப்பதும், நினைப்பதும் கூட எங்களுக்குள் நல்லதோர் உணர்வை , ஊக்கத்தை உந்துதலை உருவாக்கும் என்பதுதான் உண்மையாகும்!

**– மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா–**
**மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்**
**மெல்பேண்,**
**ஆஸ்திரேலியா**





# மூடப்பட்டிருக்கும் கடைத்தொகுதியை சமுர்த்தி பயனாளிகளுக்கு வழங்குக!

## பத்தனை சந்தியில் போராட்டம்

கொட்டகலை – தலவாக்கலை மார்க்கத்தில் பத்தனை சந்தியில் அமைந்துள்ள கடைத்தொகுதி யாரால் அமைக்கப்பட்டது என்பது உடனடியாக வெளிப்படுத்த வேண்டும் என்றும் மேற்படி கடைத்தொகுதி சமுர்த்தி பயனாளிகளுக்கென்று 2015 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதொன்று என்ற கோரிக்கையை முன்வைத்து நேற்றுமுன்தினம் (திங்கட்கிழமை) அந்த இடத்தில் எதிர்ப்பு நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் சமுர்த்தி பயனாளிகளும் அவர்களுக்கு ஆதரவாக அப்பகுதி மக்களும் கலந்து கொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். கொட்டகலை பிரதேச சபையின் மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர் சுப்ரமணியம் ராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் கலந்து கொண்ட மக்கள், எமது பிரதேசத்தில் எமக்கே தெரியாமல் யாரோ ஒருவர் கடைத்தொகுதியை அமைத்துள்ளனர். இது தொடர்பாக சில ஊடகங்களில் முழு விவரங்களுடன் கட்டுரை ஒன்று வெளிவந்திருந்தது.

அதற்குப்பிறகே இது மக்கள் பயன்பாட்டுக்கு ஆரம்பிக்கப்பட்டதென்ற விவரம் தெரியவந்துள்ளது. எனவே தனிநபர்களால் இந்த இடம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமை தெளிவாகியுள்ளது.

இதை மக்களுக்கே வழங்க வேண்டும் எனக் கோருகிறோம். எம்மால் சமுர்த்தி சேவைகளைப் பெற தலவாக்கலை வரை பயணிக்க முடியாது என்று கூறினர்.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கு தலைமை தாங்கிய பிரதேச சபை உறுப்பினர் எஸ்.ராஜா கூறுகையில் –

இந்தக் கட்டடம் அமைந்ததன் பின்னணியில் பல ஊழல்கள் அரங்கேறியுள்ளன. இது தொடர்பாக நான் கடந்த இரண்டு வருடங்களாகக் கேள்வி எழுப்பியும் கொட்டகலை பிரதேச சபை தவிசாளர் சரியான பதில்களை எனக்கு வழங்கவில்லை. தமக்கும் இந்தக் கட்டடத்துக்கும் சம்பந்தமில்லை என்கிறார். அருகிலுள்ள ஆலய நிர்வாக சபையால் இது 2008 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது என்கிறார்.

இந்த ஆலயத்துக்கு அப்படி ஒரு நிர்வாக சபையே கிடையாது. ஏனென்றால் நான் இந்தப் பகுதியை சேர்ந்த உறுப்பினர். 2008 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட அனுமதிக்கு எவ்வாறு 2022 ஆம் ஆண்டு கட்டடம் கட்ட முடியும்? தனது நிர்வாக எல்லைக்குள் இருக்கும் பகுதியில் ஒரு கட்டடம் எழுவதை எவ்வாறு பிரதேச சபை நிர்வாகம் பார்த்துக்கொண்டிருந்தது? இதன் பின்னணி சூழ்ச்சி வெளிக்கொணர வேண்டும். இது மக்களுக்கு சேர வேண்டியது. சரியான பதில்கள் எமக்குக் கிடைக்காவிடின் எமது போராட்டம் தொடரும். – என்றார்.

# பெருமளவு கடன் கொண்ட நாடுகளுக்கு இலங்கை ஓர் எச்சரிக்கை அறிகுறியாகும்!

## சர்வதேச நாணயநிதியம் சுட்டிக்காட்டு

மிகப்பெருமளவு கடனும் மட்டுப்படுத்தப்பட்ட கொள்கைளும் உள்ள நாடுகளுக்கு இலங்கை ஓர் எச்சரிக்கை அறிகுறி என சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலீனா ஜோர்ஜீவா தெரிவித்துள்ளார்.

இந்தோனோஷியாவில் இடம்பெற்ற ஜி20 நிதியமைச்சர்கள் மத்திய வங்கி ஆளுநர்களின் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் யுத்தம் தீவிரமடைந்துள்ளது இதன் காரணமாக உணவுப்பொருள்கள் உட்பட அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன. சர்வதேச நிதி நிலைமை எதிர்பார்த்ததை விட இறுக்கமடைந்துள்ளது. பெருந்தொற்று தொடர்பான குழப்பங்களும் சர்வதேச விநியோகம் எதிர்கொள்கின்ற தடைகளும் பொருளாதார செயற்பாடுகள் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த மாத இறுதியில் 2022-23 ஆம் ஆண்டுக்கான பொருளாதார வளர்ச்சி வீழ்ச்சியடையும் என நாங்கள் மதிப்பிடவுள்ளோம். எதிர்மறையான ஆபத்துக்கள் காணப்படும். குறிப்பாக பணவீக்கம் அதிகமாகக் காணப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மிகப்பெருமளவு கடனும் மட்டுப்படுத்தப்பட்ட கொள்கைளும் கொண்ட நாடுகள் மேலும் அழுத்தங்களை எதிர்கொள்ளக்கூடும் இலங்கை எந்த திசையில் செல்கின்றது என்பதை பாருங்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கரடி தாக்கி ஒருவர் புளியங்குளத்தில் காயம்

வவுனியா – புளியங்குளம் காட்டுப் பகுதியில் கரடியின் தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் இளைஞன் ஒருவர் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் தேன் எடுப்பதற்காக எட்டு பேர் கொண்ட குழு புளியங்குளம் கச்சக்கொடி பகுதியில் உள்ள காட்டுப்பகுதிக்குச் சென்ற போது கரடியின் தாக்குதலுக்கு இலக்காகி மேற்படி இளைஞன் படுகாயமடைந்துள்ளார்.

இதனையடுத்து அந்த இளைஞரை அப்பகுதியில் இருந்து ஏனையவர்கள் மீட்டு புளியங்குளம் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றிருந்தனர்.

இந்நிலையில் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு படுகாயமடைந்த இளைஞன் மாற்றப்பட்டிருந்தார்.

புளியங்குளம் பகுதியைச் சேர்ந்த நடராசா தர்மராசா (வயது 33) என்ற இளைஞரே கரடியின் தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்திருந்தவராவார்.

# இந்தியாவில் இருந்து மேலும் 21 ஆயிரம் மெற்றிக் தொன் உரம்

அடுத்த இரண்டு வாரங்களில் இந்தியாவில் இருந்து மேலும் 21 ஆயிரம் மெற்றிக் தொன் உரம் நாட்டுக்கு வரும் என விவசாயத்துறை அமைச்சு கூறியுள்ளது.

இந்திய கடன் திட்டத்தின் கீழ் இந்த இருப்பு கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக விவசாயத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்திய கடனின் கீழ் கொள்முதல் செய்யப்பட்ட 65 ஆயிரம் மெற்றிக் தொன் உரத்தில் இருந்து மொத்தம் 44 ஆயிரம் மெற்றிக் தொன் உரம் கடந்த வாரம் நாட்டுக்கு வந்துள்ளது.

உரங்களை விநியோகிப்பதற்குத் தேவையான எரிபொருளை பெற்றுக் கொள்வதற்கு பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு நிதி வழங்குமாறும் அமைச்சர் அதிகாரிகளுக்குப் பணித்துள்ளார்.

அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் உர விநியோகம் மேற்கொள்ளப்படுவதாக விவசாயத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

## பிரதேச சபைத் தலைவர் ராஜமணி பிரசாத்தின் விளக்கம்

கொட்டகலை பிரதேச சபை 2018 ஆம் ஆண்டு தான் ஆரம்பிக்கப்பட்டது. 2008 ஆம் ஆண்டு நுவரெலியா பிரதேச சபையால் மேற்படி ஆலய நிர்வாகத்துக்கு கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அந்நேரம் நிதி இல்லாத காரணத்தால் இப்போது கட்டப்பட்டிருக்கலாம். நாம் இந்தக் கட்டடத்துக்கு எவருக்கும் அனுமதி வழங்கவில்லை. எம்மிடம் எவரும் அனுமதி பெறவும் இல்லை. இது தொடர்பாக வாய் மூலமும் எழுத்து மூலமும் கேள்வி எழுப்பிய அனைவருக்கும் பதில்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் நுவரெலியா பிரதேச சபையால் வழங்கப்பட்ட அனுமதியின் படி கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. நாம் இது தொடர்பாக ஆலய நிர்வாகத்திடம் கேள்வி எழுப்பியுள்ளோம். அவர்கள் அதற்குரிய ஆவணங்களை சமர்ப்பித்துள்ளனர். இந்தத் திட்டத்தை புதுப்பிக்கும் படி கோரியுள்ளோம். – என்றார்.

# இலங்கையில் மீண்டும் கொவிட் பரவும் அபாயம்

## சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை



இலங்கையில் மீண்டும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்படக்கூடும் என சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

குறிப்பாக உலகம் முழுவதும் பரவி வரும் கொரோனா வைரஸின் புதிய மாறுபாடு இலங்கைக்குள் நுழையும் அபாயம் இருப்பதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. கொரோனாவின் புதிய மாறுபாடு நாட்டுக்குள் நுழைந்ததா என்பதைக் கண்டறிய வேண்டும் என அதன் தலைவர் உபுல் றோஹண தெரிவித்துள்ளார்.

நாட்டில் கடந்த 24 மணித்தியாலங்களில் மேலும் 34 பேருக்கு கொரோனாவைரஸ்தொற்றியுள்ளமைஉறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, நாட்டில் பதிவான மொத்த கொரோனா பாதிப்புகளின் எண்ணிக்கை 6 லட்சத்து 64 ஆயிரத்து 414 ஆக பதிவாகியுள்ளது.

# சிங்கள, பௌத்த மேலாதிக்கத்தால் தமிழர் பண்பாடு சிதைக்கப்பட்டு அதன் தனித்துவம் இழக்கப்படுகிறது!

## ஐங்கரநேசன் வேதனை



தேசியத்தின் பிரதான கூறாக ஓர் இனம் பேசுகின்ற மொழி எவ்வாறு அமைந்துள்ளதோ அதே அளவுக்கு அந்த இனத்தின் தனித்துவமான பண்பாடும் பிரதான இடத்தைப் பிடித்துள்ளது.

ஆனால் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தாலும் உலகமயமாக்கலினாலும் தமிழ் மக்களின் பண்பாடு சிதைக்கப்பட்டு அதன் தனித்துவத்தை இழந்துகொண்டிருக்கின்றது.

இதைப்பற்றிப் பெயரில் தமிழ்த்தேசியத்தைக் கொண்டுள்ள அரசியற் கட்சிகள் கருத்தில் எடுப்பதாகத் தெரியவில்லை. பண்பாட்டை உள்வாங்காமல் தேசியம் முழுமைபெறாது. அது உள்ளீடற்ற கொழுக்கட்டை போன்றது என தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் ஆடிப்பிறப்பு விழா உரும்பிராயில் கொண்டாடப்பட்டது. அந்த விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை சுட்டிக்காட்டியுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் –

ஆடிப்பிறப்பு தமிழ் மக்களின் பண்பாட்டை வெளிப்படுத்துகின்ற ஒரு பண்டிகையாகும். பன்மைத்துவம் மிக்க ஆரோக்கிய உணவைக் கூடிப்பகிர்ந்துண்ணும் உணவுப் பண்பாட்டை எடுத்தியம்புகின்ற ஆடிப் பிறப்புக்குப் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கிய காலமும் ஒன்றிருந்தது.

ஆனால் இன்று விடுமுறை மாத்திரம் இல்லாமற் போகவில்லை. தமிழ் மக்களின் வாழ்வியலில் ஆடிப் பிறப்பும் அதுசார்ந்த கொண்டாட்டங்களுங்கூட இல்லாமல் போய்க் கொண்டிருக்கின்றன.

இலங்கையின் சுதந்திரத்துக்குப் பின்னரான தமிழர் அரசியலில் விடுதலைப் புலிகளின் காலத்திலேயே தமிழ் இனத்தின் பண்பாடு தொடர்பாகவும் கலை இலக்கியங்கள் பற்றியும் அதிக கவனம் செலுத்தப்பட்டது.

இதற்கென கலை பண்பாட்டுக் கழகம் என்று தனியான ஓர் அலகே உருவாக்கப்பட்டது. போராளிகளிடம் மாத்திரமல்லாமல் தமிழ்ப் பண்பாடு தொடர்பாக உணர்வுபூர்வமான பிரக்ஞை மக்களிடமும் ஏற்படுத்தப்பட்டது. ஆனால், முள்ளிவாய்க்கால் யுத்தம் எல்லாவற்றையும் முடிவுக்குக் கொண்டுவந்துவிட்டது.

தேசியம் என்பது அரசியல்வாதிகளிடமல்ல அது மக்களிடம்தான் உள்ளது. ஓர் இனத்தை மற்றைய இனங்களிடமிருந்து வேறுபிரித்துக்காட்டும் தனித்துவமான வாழ்வியல் முறைமையே தேசியமாகும்.

இதனாலேயேஓர் இனத்தைஅழிக்கநினைப்பவர்கள் தேசியத்தின் வேர்களில் ஒன்றான பண்பாட்டைச் சிதைப்பதற்கு முயற்சிக்கிறார்கள். ஆனால், பண்பாட்டுச் சிதைவு மக்களாலேயோ அல்லது அரசியல் வாதிகளாலேயோ கண்டுகொள்ளாமல் விடப்படுகிறது. இந்நிலை மாறவேண்டும். – என்றார்.

# அவசரகால நிலைமையைப் பிரகடனப்படுத்தி வெளியிட்ட அறிவிப்பை மீளப்பெறவேண்டும்!

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்து

நாட்டின் தற்போதைய நிலைவரத்துக்கு அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்துவதென்பது ஒருபோதும் தீர்வாக அமையாது என்று சுட்டிக்காட்டியிருக்கும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தி பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் வெளியிடப்பட்டிருக்கும் அறிவிப்பு உடனடியாக மீளப்பெறப்படவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

நாட்டில் அவசரகாலநிலையைப் பிரகடனப்படுத்தி பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளியிட்ட அறிவிப்பு உடனடியாக மீளப்பெறப்படுவதுடன் மக்களின் உரிமைகள் உறுதிசெய்யப்படவேண்டும் என்று வலியுறுத்தி வெளியிட்டிருக்கும் அறிக்கையிலேயே இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு –

நாடாளுமன்றத்தின் ஊடாக இடைக்கால அரசாங்கத்துக்குரிய ஜனாதிபதி தெரிவுசெய்யப்படுவதற்கு 3 நாள்களுக்கு முன்னதாக பதில் ஜனாதிபதியால் அவசரகாலநிலை பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்றது.

ஏற்கனவே சுட்டிக்காட்டியவாறு அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தும்போது அதன்மூலம் அவசரகால வழிகாட்டல்களை வெளியிடுகின்ற, அரசமைப்பின் சரத்துக்கள் தவிர்ந்த எந்தவொரு சட்டத்திலும் உள்ள சரத்துக்களை நீக்குகின்ற அல்லது திருத்துகின்ற அதிகாரம் பதில் ஜனாதிபதிக்கு வழங்கப்படுகின்றது.

குறிப்பாக அவசரகால வழிகாட்டல்களின் ஊடாக நீதிமன்றப்பொறிமுறைக்கு அப்பால் நபரொருவரைத் தடுத்துவைக்கக்கூடிய வாய்ப்பு காணப்படுகின்றது. கடந்த காலங்களில் அவசரகால வழிகாட்டல்களின் மூலம் இடம்பெற்ற பெரும் எண்ணிக்கையான மனித உரிமை மீறல் சம்பவங்கள் பதிவாகியிருந்தன.

எனவே, நாடாளுமன்றத்தில் புதிய ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதற்கான வாக்கெடுப்பை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கும் நிலையில், அது தொடர்பாகக் கருத்துக்களை வெளியிடுவதற்கு மக்கள் கொண்டிருக்கும் சட்டரீதியான உரிமையை அடக்குவதற்கோ அல்லது குறித்தவொரு வேட்பாளர் தொடர்பில் விருப்பு, வெறுப்பை வெளியிடுவதற்கான வாய்ப்பை முடக்குவதற்கோ அவசரகாலச்சட்ட வழிகாட்டல்கள் பயன்படுத்தப்படக்கூடாது என்று நாம் கருதுகின்றோம்.

போராட்டங்களில் ஈடுபடுதல் மற்றும் கருத்துக்களை வெளிப்படுத்தல் ஆகியவற்றுக்கான சுதந்திரம் என்பது மக்களின் அடிப்படை உரிமைகளின் பிரதானமானதாகும்.

ஆகவே, அமைதியான முறையில் முன்னெடுக்கப்படும் போராட்டங்களையும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தையும் முடக்குவதற்கு அவசரகால வழிகாட்டல்கள் பயன்படுத்தப்படக்கூடாது என்பதுடன் அது தன்னிச்சையான கைதுகள் மற்றும் தடுத்துவைப்புகளுக்கும் வழிவகுக்கக்கூடாது.

நாட்டின் தற்போதைய நிலைவரத்துக்கு அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்துவதென்பது ஒருபோதும் தீர்வாக அமையாது என்று நாம் நம்புகின்றோம்.

எனவே, அவசரகாலநிலையைப் பிரகடனப்படுத்தி பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் வெளியிடப்பட் டிருக்கும் அறிவிப்பு உடனடியாக மீளப்பெறுவதுடன் மக்களின் அடிப்படை உரிமைகள் உறுதிப்படுத்தப்படவேண்டும் என்று நாம் வலியுறுத்துகின்றோம் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 48 நாள்களாக மீனவர்களுக்கு யாழில் எரிபொருள் இல்லை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூலை 20

எரிபொருள் கிடைக்காமையால் மிகுந்த துன்பங்களை அனுபவித்து வருகின்றோம் என வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் தலைவர் நா.வர்ணகுலசிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார் –

எமது கடல் தொழிலுக்குத் தேவையான எரிபொருள் வழங்கி இன்றுடன் 48 நாள்கள் ஆகின்றன. ஆரம்பத்தில் 20 லீற்றர் எரிபொருள் தந்தார்கள்.இன்றுடன் 48 நாள்கள் ஆகின்றன. எமது குடும்பங்கள் பற்றி ஒருவருக்கும் அக்கறை இல்லை. மாதம் மாதம் அவர்களுக்கு சம்பளம் வரும். மக்களுக்கு அவ்வாறு இல்லை.

பெற்றோல்,டீசல் கூடக் கிடைக்கிறது ஆனால் மண்ணெண்ணெய் பற்றிய கதையே இல்லை.கறுப்புச் சந்தையில் 1,300 ரூபா வரையில் மண்ணெண்ணெய் விற்பனை செய்யப்படுகிறது.கட்டுமரம் உள்ள சிலர் தொழிலுக்கு செல்கின்றனர். ஏனையவர்கள் கடல் கரையில் படகை கவிழ்த்துவிட்டு கடலைப் பார்த்து கொண்டு இருக்கின்றனர்.

இந்த இக்கட்டான நிலையிலும் கூட களவாக அட்டை பிடிக்கப்படுகிறது. அனுமதி பெற்றவர்கள் எரிபொருள் இல்லாமல் உள்ளனர். ஆனால் சட்டவிரோத அட்டைத் தொழில் தாராளமாக நடைபெறுகிறது. அவர்களுக்கு எங்கிருந்து எரிபொருள் கிடைக்கிறது என்று தெரியவில்லை.

இது பற்றி கடல் தொழில் அமைச்சரிடம் நாம் கேட்டோம். 20 ஆம் திகதிக்குப் பின்னர் இந்தியாவிலிருந்து காங்கேசன்துறைக்கு எரிபொருளைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினர். நாம் பட்டினிச் சாவை எதிர்நோக்கியுள்ளோம். இதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். – என்றார்.

# மன்னார் வளைகுடா கடற்கரையில் கணவாய் மீன் சீசன் அரபு நாடுகளுக்கும் ஏற்றுமதியாகும் பாம்பன் கணவாய்

அரபு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் டியூப் கணவாய் மீன்களின் சீசன் தொடங்கியதால் மன்னார் வளைகுடா கடல் பிராந்தியத்தில் மீன் பிடிக்கச் சென்ற பாம்பன் விசைப்படகு மீனவர்களுக்கு அதிக அளவில் கிடைப்பதால் மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

பாம்பன் தெற்கு மீன்பிடி துறைமுகத்தில் இருந்து 90 இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீனவர்கள் மீன்பிடிக்க மன்னார் வளைகுடா பகுதிக்கு சென்ற நிலையில் ஆழ்கடல் பகுதியில் அதிக அளவில் டியூப் கணவாய் மீன்கள் சிக்கின.

சைக்கிள் டியூப் போன்று இருப்பதால் இதை டியூப் கணவாய் என்று மீனவர்கள் அழைக்கின்றனர்.

இது கணவாய் வகையில் ஒரு வகைப்படும். ஓர் அடி நீளம் வரையில் இருக்கும். இதற்கு ஊசி கணவாய் என்ற மற்றொரு பெயரும் உண்டு. இந்த கணவாய் மீன்கள் மணிக்கு 70 கிலோ மீற்றர் வேகத்தில் நீந்திச் செல்லும்.

தற்போது ஒரு கிலோ 200 ரூபா முதல் 250 ரூபா வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது.

பாம்பன் மீன்பிடி துறைமுகத்தில் வியாபாரிகள் மூலம் கொச்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டு அங்கிருந்து அரபு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இந்த வகை கணவாய் மீன்கள் பெரிய வகை மீன்களிடம் இருந்து தப்பிக்க கறுப்பு நிறத்தில் திரவம் போன்று வெளியிட்டு எதிரிகளிடம் இருந்து தப்பித்து செல்லும் தன்மையுடையவை.

உணவுக்காக மட்டும் அதிக அளவில் ஏற்றுமதியும் இது செய்யப்படுகிறது.



# குருந்தூர் மலையில் விகாரையைக் கட்ட சாணக்கியனும் சுமந்திரனும் பாரிய தடை



## புலம்புகிறார் தேரர்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன் மற்றும் இரா.சாணக்கியன் ஆகியோர் குருந்தூர் மலையில் விகாரை கட்டுவதற்கு பாரிய தடையாக இருக்கின்றனர் எனத் தேரர் ஒருவர் விசனம் தெரிவிக்கும் காணொலி இணையத்தில் பகிரப்பட்டு வருகின்றது.

மேற்படி காணொலியில் –

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நிலைப்பாடு விடுதலைப் புலிகள் அமைப்பின் கொள்கையை அடிப்படையாக கொண்டுள்ளது.

வடக்கில் சிங்களவர்கள் இருக்கக் கூடாது, அவர்களுக்கு உரிமையில்லை என்றே இவர்கள் குறிப்பிடுகிறார்கள். இருப்பினும் துரதிஷ்டவசமாக அனைவரும் நாடாளுமன்றில் அழகாக உரையாற்றுகிறார்கள்.அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் எனவும் குறிப்பிடுகிறார்கள்.

போராட்டக்காரர்களுடன் சுமந்திரன், சாணக்கியன் இராசமாணிக்கம் ஆகியோர் பேச்சை மேற்கொண்டுள்ளார்கள். நாட்டை முன்னேற்றவும், ஊழல் மோசடியை ஒழிக்கவும் வேண்டும் எனவும் மனிதாபிமானத்துடன் செயற்பட வேண்டும் எனவும் குறிப்பிடுகிறார்கள்.

மனிதாபிமானத்துடன் கருத்துரைக்கும் நபர்கள் வடக்கில் உள்ள தொல்பொருள் சின்னங்களைப் பாதுகாக்க அவதானம் செலுத்தவில்லை.

தெற்கில் உள்ள தொல்பொருள் சின்னங்களால் மக்கள் பொருளாதார ரீதியில் பயனடைகிறார்கள். வடக்கில் பெரும்பாலான தொல்பொருள் சின்னங்கள் உள்ளன.

600 தொல்பொருள் சின்னங்கள் இதுவரை அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. வடக்கில் தொல்பொருள் சின்னங்களை அபிவிருத்தி செய்தால் வடக்கு பொருளாதார ரீதியில் முன்னேற்றமடையும்.

இதற்கு ஏன் தமிழ்த் தலைமைகள் என குறிப்பிட்டுக் கொள்கிறவர்கள் ஒத்துழைப்பு வழங்குவதில்லை. தெற்கில் ஒரு நாடு – ஒரு சட்டம் தொடர்பில் கருத்துரைக்கிறார்கள், வடக்கில் தனி ஈழம் தொடர்பில் கருத்துரைத்து பிரச்சினைகளைத் தோற்றுவிக்கிறார்கள். – என அந்த தேரர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் இரா.சாணக்கியன் ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தியுள்ளார்.

நாங்கள் இருவரும் வடக்கு, கிழக்கில் சட்டவிரோதமான முறையில் இடம்பெறும் பல்வேறு விடயங்களுக்குக் கடுமையான முறையில் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றோம்.

குறிப்பாக குருந்தூர் மலையில் சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டுள்ள விகாரை தொடர்பிலும் நடவடிக்கை எடுத்துள்ளோம். எனவேதான் எங்களுக்கு எதிராக சேறு பூசும் நடவடிக்கையை இந்தத் தேரர் முன்னெடுத்துள்ளார்.

தற்போது இலங்கையில் அனைத்து இனங்களும் ஒற்றுமையாக ஒருமித்து பயணிக்கும் நிலையில் இவ்வாறான சிலரின் செயற்பாடுகளால் இன நல்லிணக்கம் பாதிக்கப்படும் அபாயம் காணப்படுகின்றது.

இதன்காரணமாகவே இவ்வாறான இனவாதிகளின் செயற்பாடுகளுக்கு நாம் தடைகளை ஏற்படுத்துகின்றோம். – எனக் குறிப்பிட்டுள்ளார்.

# 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தூரநோக்குடன் செயற்படவேண்டும்

## ஈரோஸ் ஜனநாயக முன்னணி கோரிக்கை



(க.கிருபாகரன்)

அரசாங்கத்தின் தூரநோக்கற்ற நிர்வாக முறைமையால் ஏற்பட்ட மிகமோசமான பொருளாதார நெருக்கடியின் காரணமாக ஆரம்பித்த இளைஞர்கள் போராட்டம் மக்கள் போராட்டமாக எழுச்சி பெற்று, நாட்டின் ஜனாதிபதி தப்பிஓடி இராஜினாமா செய்யுமளவுக்கு வீரியமடைந்ததோடு, நாட்டில் புதிய ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்யுமளவிற்கு மாற்றம் ஏற்பட்டுள்ளமை இலங்கையின் வரலாற்றுப் பதிவாகும் என ஈரோஸ் ஜனநாயக முன்னணி பொதுச்செயலாளர் இரா.ஜீவன் இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

புதிய ஜனாதிபதி தெரிவு இடம்பெறவுள்ள நிலையில் அது தொடர்பாக ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு –

புதிய ஜனாதிபதி தெரிவில் வடக்கு, கிழக்கு, மலையகம் இஸ்லாமிய, தமிழர்களின் பிரதிநிதிகள் மிகநிதானமாகவும், பொது இணக்கப்பாட்டுடனும், தமிழ்பேசும் மக்களின் உணர்வுகளை புரிந்துகொண்டும் சரியான முடிவை எடுக்கவேண்டும்.

100 நாள்களுக்கும் மேலாக மிகப்பலமான போராட்டமொன்று நாட்டிலே தொடர்கின்றது.

இந்தப் போராட்டத்தில் தமிழர் தரப்பு எந்த ஒரு நிபந்தனையும் இன்றி, தங்களுடைய ஆதரவை சில பிரதேசங்களில் முழுமையாகவும், சில இடங்களில் பரவலாகவும் வழங்கி வருகின்றனர்.

குறிப்பாக மலையகப் பெருந்தோட்ட உழைப்பாளர்கள் தங்களுடைய நாள் சம்பளத்தை தியாகம் செய்து போராட்டங்களில் பங்குகொண்டனர். ஆனால், போராட்டக்காரர்கள் வெளியிட்ட உத்தியோகபூர்வ அறிக்கையில் மலையக மக்கள் உட்பட தமிழ்பேசும் மக்களுடைய பிரச்சினைகள் தொடர்பாக எதுவும் குறிப்பிடாதமை கவலையளிக்கின்றது. நாட்டின் நெருக்கடிக்கான தீர்வு என்பது தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைக்கும் சமாந்தரமாக தீர்வுகாணது முழுமையடையாது.

ஆகவே போராட்டக்காரர்கள் தமிழ்பேசும் மக்களின் உணர்வுகளை புரிந்துகொண்டு, அவர்களின் அறிக்கையில் தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு தொடர்பாகவும் பேசவேண்டும்.

மேலும் தற்போதைய ஜனாதிபதித் தெரிவு மக்களுடைய பங்குபற்றலுடன் நடைபெறப்போவதில்லை. மாறாக, நாடாளுமன்ற உறுப்பினர்களே ஜனாதிபதியைத் தெரிவுசெய்யப்போகின்றனர்.ஆகவே இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மனச்சாட்சியுடன் நடந்துகொள்ள வேண்டும். 225 லட்சம் மக்களின் பிரதிநிதியாக வாக்களிக்கப் போகும் நீங்கள் மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு, அதற்கேற்ப உங்களுடைய பணியை நிறைவேற்ற வேண்டும். அதிலும் வடக்கு – கிழக்கு, மலையக, இஸ்லாமிய, தமிழ்பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மிகப்பெரிய சமூகப் பொறுப்பு இருக்கின்றது.

இந்நிலையில் பணப் பரிமாற்றத்துக்கும், சூழ்ச்சிகளுக்கும் விலைபோகாது தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைகளைப் புரிந்துகொள்ளக் கூடிய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண, துணிந்து முடிவெடுக்கக் கூடிய, நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்டெடுக்கும் ஆற்றலுள்ள நாட்டிலுள்ள துறைசார்ந்த நிபுணர்களை இணைத்துக் கொண்டு, முழுமையாக சிவில் நிர்வாகமொன்றிற்கூடாக நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லக்கூடிய ஒருவரை இந்த நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்வதற்கு உங்கள் வாக்கைப் பயன்படுத்த வேண்டும் – எனவும் அந்த அறிக்கையில் மேலும் கேட்டுள்ளார்.

# விபுலானந்தர் மற்றும் பாரதியார் சிலைகளுக்கு யாழில் அடிக்கல்





(கலையமுதன்)

யாழ்ப்பாணத்தின் விபுலானந்தர் சிலை மற்றும் பாரதியார் சிலையை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நடைபெற்றது.

சுவாமி விபுலானந்தரின் 75 ஆவது குருபூசை தினத்தில் யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள சுற்றுவட்ட வளைவிலேயே இந்த சிலைகளுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

சைவ மகாசபை மற்றும் யாழ்.மாநகர சபை ஆகிய இணைந்து இந்த நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளவுள்ளன.

இந்நிகழ்வில் யாழ் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், யாழ் மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலன், அகில இலங்கை சைவ மகா சபையின் தலைவர் பரா.நந்தகுமார், மாநகர சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு சென்றவர் மறுவாழ்வு முகாமில் தூக்கிட்டுத் தற்கொலை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூலை 20

இலங்கையில் இருந்து விமானம் மூலம் இந்தியா சென்றவர் மண்டபம் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் தூக்கிட்டுத் தற்கொலை செய்துள்ளார்.

இதன்போது சந்திரசேகரம் சம்பந்தன் என்னும் 25 வயதையுடைய கருணை இல்ல வீதி மூன்றாம் ஒழுங்கை புளியங்குளம், வவுனியா என்னும் முகவரியுடைய இளைஞனே தற்கொலை செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் இருந்து 25.02.2021 அன்று கொழும்பில் இருந்து விமானம் மூலம் சென்னை சென்றுள்ளார். பின்னர் ஒசூர் பகுதியில் தொழில் புரிந்து விட்டு 06.01.2022 அன்று இராமேஸ்வரம் தனுஷ் கோடி சென்றவேளை மரைன் பொலிஸார் விசாரணை செய்து பின்னர் மண்டபம் தனித்துணை ஆட்சியர் மூலம் 06.01.2022 முதல் மண்டபம் முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்தவர் வெளியில் கட்டட வேலைக்கும் சென்று வந்துள்ளார். இருந்தபோதும் 2022.07.18 அன்று அவர் தங்கியிருந்த இடத்தில் தற்கொலை செய்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றபோதும் அதற்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை.

# தமிழ் மக்களின் கோரிக்கையை ஏற்கத்தயாரில்லை ஜனாதிபதித் தெரிவில் யாருக்கும் வாக்களிக்கோம்!

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் திட்டவட்டம்



தமிழ் மக்களது அரசியல் அபிலாஷைகளை ஏற்றுக்கொள்ள சஜித் பிரேமதாஸவோ, அநுரவோ, ரணிலோ தயாராக இல்லை.

நாடாளுமன்றத்தில் இன்று புதன்கிழமை நடைபெறவிருக்கின்ற ஜனாதிபதி தெரிவு தொடர்பாக, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மத்திய குழு கூடி எமது நிலைப்பாடுகள் தொடர்பாக ஆழமாக ஆராய்ந்தோம். இதனடிப்படையில் ஜனாதிபதி தெரிவில் எமது ஆதரவைக் கோரி நிற்கும் தரப்புக்களுடன் சந்திப்புகள் இடம்பெற்றன. ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரணி அமரசூரிய மற்றும் அந்த அமைப்பைச் சேர்ந்த சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார ஆகியோரோடு சந்திப்புக்கள் இடம்பெற்றிருந்தன.

ஜனாதிபதி தெரிவுக்காகத் தம்மை முன்மொழிந்து இருப்பவர்கள், தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் தீர்வு விடயங்களை முன்னெடுக்கத் தயாரில்லாதவர்களாகவே உள்ளனர்.

அந்த வகையிலேயே இன்று நடைபெறவிருக்கின்ற வாக்கெடுப்பில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி, யாருக்கும் ஆதரவு தெரிவிக்கப்போவதில்லை என்கின்ற முடிவிற்கு எமது மத்திய குழு ஏகமனதாக தீர்மானித்திருக்கின்றது.

இந்த ஜனாதிபதித் தெரிவிற்கு பெயர் முன்மொழிந்து இருப்பவர்களில் ரணில் விக்கிரமசிங்கவுடைய பெயரை நாங்கள் முதலிலேயே நிராகரித்து விட்டோம். இந்த நிராகரிப்பும் எமது மத்திய குழுவால் ஏகமனதாக எடுக்கப்பட்ட முடிவாகும். இதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. முதலாவதாக இன்றைக்கு இந்த நாட்டில் இருக்கக்கூடிய குழப்பங்களுக்கு கோட்டாபய ராஜபக்ஷ எந்த அளவிற்கு காரணமாக இருக்கின்றாரோ, அதனுடைய தொடர்ச்சியாக ரணில் விக்கிரமசிங்க செயற்பட்டு வருகின்றார். இதன் காரணத்தாலேயே அவரை ஏற்க முடியாது என்ற முடிவிற்கு வந்திருந்தோம்.

இன்றைக்கு ராஜபக்ஷ தரப்பை அகற்றி ஓர் அடிப்படை மாற்றத்துக்காகப் போராடிக் கொண்டிருக்கின்ற இந்த சந்தர்ப்பத்திலே, ரணில் விக்கிரமசிங்க அதற்கு ஒரு முட்டுக்கட்டையாக இருக்கின்றார் என்ற விடயமும் மிகத்தெளிவாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனவே – அவரை ஆதரிக்க முடியாது என்றும் – தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், கடந்த 2015 ஆம் ஆண்டு – மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து நடைபெற்ற அவரது ஆட்சிக்காலத்தில் தமிழ் மக்களுடைய இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற விடயத்தில், ஒற்றையாட்சிக்கு உட்பட்ட ஓர் இடைக்கால அறிக்கை ஒன்றையே தயாரித்து இருந்தனர். ஐக்கிய தேசியக் கட்சி அதற்கு மட்டும் தான் ஆதரவு தரலாம் என்ற விடயத்தையும் – சமஷ்டியையும் தமிழ் மக்களுடைய சுயநிர்ணயத்தையும் நிராகரித்து அவர்களுடைய செயற்பாடுகள் இன்னமும் அதிலிருந்து விடுபடாமல் இருக்கின்ற நிலையில், அவரை ஏற்க முடியாது என்ற முடிவையும் நாங்கள் எடுத்து இருக்கிறோம்.

ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் தெரிவுசெய்யப்பட்ட முதற்கிழமையே என்னை சந்திக்க வேண்டும் என்று கேட்டதால் சந்திப்பொன்று நடைபெற்றிருந்தது. என்னோடு இடம்பெற்ற பேச்சிலே தீர்வு என்கின்ற விடயத்தில் – நாங்கள் தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்படவேண்டும் என்கின்ற சமஷ்டி அடிப்படையிலான தீர்வைக் கேட்டபொழுது, அதை உதாசீனம் செய்கின்ற வகையில் – ‘நடைமுறைக்கு சாத்தியமான விடயங்களில் தான் நாங்கள் அரசியலில் ஈடுபட வேண்டும்’ என்ற தொனிப்பொருளில் அவருடைய பதில் இருந்தது.

இரண்டாவது விடயம் –இந்த கோட்டாபயவினுடைய அரசாங்கத்தை எவ்வளவுக்கு உடனடியாக வெளியேற்ற முடியுமோ, அதற்காக நாங்கள் செயற்பட வேண்டும் என்ற என்னுடைய கருத்தை கூறிய போது – ‘அந்த விடயத்தில் அவசரப்பட வேண்டிய தேவை இல்லை’ என்ற கருத்தையும் அன்றைக்கே பகிர்ந்து கொண்டிருந்தார்.

இன்றைக்கு அவர் நடந்து கொள்ளும் விதத்தில் இருந்து அவர் அன்று தெரிவித்த கருத்திலிருந்து எந்தவிதத்திலும் இன்னமும் விலகிச் செல்லவில்லை என்பது நிரூபணமாகியிருக்கிறது.

எனவே, இந்தக் காரணங்களின் அடிப்படையில் தான், இதற்குப் பிறகு ரணில் விக்கிரமசிங்க எங்களைச் சந்திக்க முன்வந்த நேரத்திலும் கூட, நாங்கள் அதனைப் பலதடவை நிராகரித்து இருந்தோம். எங்களைப் பொறுத்தமட்டில் இவ்வாறானதொரு தரப்புடன் பேச்சு நடத்துவதே ஒரு பயனற்ற செயற்பாடு என்றே நாங்கள் கருதுகின்றோம்.

இதேபோன்றே, ரணில் விக்கிரமசிங்கவை நாங்கள் என்ன காரணத்துக்காக நிராகரிக்கின்றோமோ, அதேநிலைப்பாட்டில் தான் சஜித் பிரேமதாஸவும் தனது கருத்துக்களைத் தெரிவித்து இருந்தார். அதிகாரப் பகிர்வு தொடர்பில் அவர் எங்களோடு பேசிய பொழுது, இந்தியாவில் உள்ள பஞ்சாயத்து முறையில் பிரச்சினைகள் தீர்க்கப்படும் முறையைக் கூறி – அதைப் போலவே தமிழ் மக்களுடைய பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்ற கோணத்தில் அவர் தன்னுடைய கருத்தைத் தெரிவித்திருந்தார்.

தமிழ் மக்களுடைய இனப்பிரச்சினை சார்ந்த விடயத்துக்கும் பஞ்சாயத்து முறைக்கும் எந்த ஒரு தொடர்பும் இல்லை என்பது சஜித் பிரேமதாஸவுக்குத் தெரிந்திருக்கவில்லை போலும்.

இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில், எந்த சம்பந்தமே இல்லாத பஞ்சாயத்து முறைபற்றிக் கூறுவதென்பது, தமிழ் மக்கள் சார்ந்த பிரச்சினையில் அவர் எந்தளவு தூரம் விளக்கத்தை பெற்றிருக்கிறார் என்பது, கேள்விக்குறியாகவே உள்ளது.

அவர் தொலைபேசியின் ஊடாக என்னை தொடர்பு கொண்ட பொழுது, ‘எனக்கு தனிப்பட்ட ரீதியில் நம்பிக்கை இருந்தது, நீங்கள் ஏனைய அரசியல்வாதிகளை விட வித்தியாசமாக செயல்படுவீர்கள் என நான் நினைத்திருந்தேன், ஆனால் – நீங்கள் அதற்கு மாறாகவே இருக்கின்றீர்கள்’ என நான் அவரிடம் தனிப்பட்ட முறையில் தெரிவித்திருந்தேன். எனவே – அவரையும் ஆதரிக்க முடியாது என்ற நிலைப்பாட்டிற்கு நாங்கள் ஏகமனதாக வந்திருக்கின்றோம்.

மேலும் – ஜே.வி.பியினுடைய அநுரகுமார திசாநாயக்கவிற்கு வாக்களிப்பது தொடர்பாக ஆராயப்பட்ட போது –

நாங்கள் சந்தித்த நாடாளுமன்ற உறுப்பினர் ஹரணி அமரசூரிய, ஹர்ஷன நாணயக்கார தமிழ் மக்களுடைய இனப் பிரச்சினை சம்பந்தமாக தங்களுடைய தனிப்பட்ட நிலைப்பாட்டைத் தெரிவித்திருந்தனர்.

தேசிய மக்கள் சக்தியினுடைய சிவில் சமூக செயற்பாட்டாளர்களுடைய நிலைப்பாட்டுக்கும் ஜே.வி.பியினுடைய நிலைப்பாட்டுக்கும் இடையில் பாரிய வேறுபாடு இருக்கின்றது. கட்சிக்கு உள்ளேயே தேசிய இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வு சம்பந்தப்பட்ட விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது எனவும், அதனால் இன்று வரவிருக்கின்ற ஜனாதிபதி தெரிவுக்கு முன்னர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்ற நிலைப்பாட்டுக்கு தங்களால் இப்போதைக்கு வர முடியாதுள்ளதாக அவர்கள் எங்களுக்குத் தெளிவாகக் கூறியிருந்தார்கள்.

ஆகவே, இந்த விடயங்களை நாங்கள் ஆராய்ந்து, எங்களுக்கு ஒரு தெளிவான – உறுதியான – தமிழ் தேசிய இனப்பிரச்சினை சம்பந்தமாகவும் – தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாஷைகள் சம்பந்தமாகவும் உத்தரவாதங்கள் இல்லாமல், எங்களுடைய ஆதரவை வழங்க முடியாது என்ற நிலைப்பாட்டுக்கு வந்திருக்கின்றோம்.

ஆகவே, ஒட்டுமொத்தமாகப் பார்க்கின்ற பொழுது, இன்று புதன்கிழமை நாடாளுமன்றத்தில் நடைபெறவிருக்கின்ற ஜனாதிபதித் தெரிவில், தமிழ் மக்களுக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் தெரிவு இல்லை என்பதனடிப்படையில், நாங்கள் இந்த வாக்கெடுப்பில் எந்தவொரு வேட்பாளருக்கும் ஆதரவாக வாக்களிக்காது தவிர்த்துக் கொள்வதெனமுடிவெடுத்து இருக்கின்றோம். – என்று தெரிவித்தார்.

# ஜனாதிபதி தேர்தலில் நடுநிலைமை வகிப்பதென்பது யாரையோ வெல்லவைக்கின்ற நிகழ்ச்சி நிரலாகும்!

## அவர்களை மக்கள் இனங்கண்டு அகற்றுவது காலத்தின் கட்டாயம் என்கிறார் மேயர் மணி!

(கலையமுதன்)

யாரிடமும் பேரம் பேசாமல் நடுநிலை வகிப்பதென்பது யாரையோ வெல்ல வைப்பதற்கான நிகழ்ச்சி நிரலாகும். அவ்வாறு செயற்படும் தமிழ்த் தரப்புகளை இனம்கண்டு தமிழ் அரசியல் தரப்பில் இருந்த அகற்ற வேண்டியது காலத்தின் கட்டாயமென யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

சமகால நிலைமைகள் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் யாழ் மாநகர முதல்வர் இதனைத் தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுக்கக் கூடிய சந்தர்ப்பம் தற்போது ஏற்பட்டிருக்கின்றது.

தென்னிலங்கையிலே போராடுகின்ற சக்திகள் கூடத் தமிழ் மக்கள் தொடர்பான விடயங்கள் மீது மெல்ல மெல்ல அக்கறை செலுத்துகின்றமையை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இலங்கையின் இனப் பிரச்சினைக்கு முற்றுமுழுதாக ஒரு தீர்வைக் காண்பதே தற்போதைய பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வாக இருக்கும்.

தற்போது உருவாகியுள்ள சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் முடிவு எடுக்க வேண்டும். தமிழ்க் கட்சிகள் குறுகிய நோக்கங்களைக் கைவிட்டு தமிழ் மக்களுக்காக சிந்திக்க வேண்டும். தமிழ்த் தேசியம் என்று சொல்கின்ற நபர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சிகள் ஒன்றிணைந்து தமிழ் மக்களுடைய நன்மைக்காக ஒரு முடிவை எடுத்து ஓரணியாகச் செயலாற்றுகின்றமை கட்டாயம். இந்த ஜனாதிபதித் தேர்தலிலே என்ன நிலைப்பாட்டைத் தமிழ் மக்கள் சார்பாக எடுக்க வேண்டும் என்பதை நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் பொது அமைப்புக்களுடன் இணைந்து ஆலோசனை செய்ய வேண்டியது கட்டாயமாகும்.

தமிழ் சிவில் சமூகத்தில் அரசியல் சார்ந்து சிந்திக்கக்கூடிய கல்வியியலாளர்களுடன் ஆலோசனைகளை மேற்கொண்டு கட்டாயம் இதனைச் செய்ய வேண்டும். அவ்வாறு ஆலோசனையை செய்யமாட்டோம் எனச் சொன்னால் தனிப்பட்ட நிகழ்ச்சிநிரலே அவர்களுக்கு இருக்கக்கூடும்.

தமிழர்களின் தலைவிதியைத் தீர்மானிக்கும் விடயத்துக்காக ஒற்றுமைப்பட மாட்டோம் ஒன்றாக முடிவெடுக்க மாட்டோம் என்று யாராவது சொன்னால்கூட அவர்கள் மீது சந்தேகப்பட வேண்டிய நிலையே காணப்படுகின்றது.

பேரம் பேசுவதற்கான வாய்ப்புகள் அதிகரித்து இருக்கின்றன. ஜனாதிபதியாக வரக்கூடியவர்களிடமிருந்து தமிழ் மக்களுக்கான குறுகிய காலப் பிரச்சினைகள் மற்றும் நீண்ட கால பிரச்சினைகள் என்ற அடிப்படையிலே வாக்குறுதிகளை பெற்றுக்கொள்ள வேண்டியது கட்டாயம். ஆகக் குறைந்தது அரசியல் கைதிகளினுடைய விடுதலை, ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்ற காணிகளை விடுவித்தல், காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினைக்கான தீர்வை வழங்குவதற்கான உத்தரவாதம் போன்றவற்றுக்கு வாக்குறுதியை பெற வேண்டும்.

பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கை அபிவிருத்தி செய்வதற்காக வடக்குக் கிழக்கை மையப்படுத்திய பொருளாதார அதிகார சபையை நிறுவுவதற்கு வரப்போகும் ஆட்சியாளர்களுடன் சம்மதித்து அதை நிறுவ வலியுறுத்த வேண்டும். அரசியல் தீர்வு தொடர்பாக காத்திரமான ஓர் உத்தரவாதத்தை வழங்க வேண்டும் என வலியுறுத்த வேண்டும்.



இதை எங்கள் கட்சிகள் செய்யத் தவறி வார்த்தை ஜாலங்களை அள்ளி வீசினால் அந்த அரசியல் கட்சிகளுக்கு தென்னிலங்கையில் ஏற்பட்டது போன்ற சூறாவளியை வடக்குக் கிழக்கில் தமிழ் மக்கள் ஏற்படுத்துவார்கள் என்பதை நாம் கூறிக் கொள்ள விரும்புகிறோம்.

எதிர்வரும் காலங்களில் தென்னிலங்கை அரசியல் பரப்பில் மாத்திரமல்ல தமிழ் அரசியல் தலைவர்களுக்கும் மறக்க முடியாத அனுபவங்களைக் கொடுக்கக்கூடிய காலமாக மாறிவிடும். இந்த சந்தர்ப்பத்தை வெறுமென கைவிடுவார்களாக இருந்தால் தமிழ் மக்கள் தகுந்த பாடத்தைக் கொடுப்பார்கள்.

யாரிடமும் பேரம் பேசாமல் நடுநிலை வகிப்பதென்பது யாரையோ வெல்ல வைப்பதற்கான நிகழ்ச்சி நிரலாகும். அவ்வாறு செயற்படும் தமிழ் தரப்புகளை இனம்கண்டு தமிழ் அரசியல் தரப்பில் இருந்து அகற்ற வேண்டியது காலத்தின் கட்டாயம். – என்றார்.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம்-67

**பாவம் தமிழ் மக்கள்**

தமிழ் மக்களின் தலைவர்கள் கத்தி முனையில் நடப்பவர்களாக காரிய மாற்ற வேண்டியிருக்கிறார்கள் என்று எழுதியிருந்தேன். பாவம் தமிழ் மக்கள். அவர்களின் தலைவர்கள் சந்தர்ப்பங்கள் வரும் போது, சமயோசிதமாக, இனத்தை முன்வைத்து, இனத்தின் நன்மைக்கான தீர்மானத்தை எடுக்க வேண்டி வருகின்ற போது, அவற்றைத் தங்களது குணாதிசயத்திற்கும், மனோ பாவங்களுக்கும் எற்றதாக, தங்களுக்காகத்தான எடுத்தார்கள்.

இந்திய ஒப்பந்தத்தை பிரபாகரன் ஏற்றுக்கொள்ளாதபோதும், ஆயுதங்களைக் கையளிப்பதற்காக அவருடனும் பாலசிங்கத்துடனும், பேசிய போது, 'ஆண்டவன் எங்களது கோரிக்கைகள் எல்லாவற்றையும் கேட்கிறார். சில சமயங்களில் நாம் எடுக்க வேண்டிய பாதைகள், நாம் எங்கு போக வேண்டுமோ, அதற்காக நாம் எந்த பாதைகளை நினைத்தோமோ, அதுவாக இருக்காது, ஆனால் கடைசியில் எங்களுக்கு எது சிறந்தது என ஆண்டவன் நினைக்கிறாரோ அங்கு அழைத்துச் செல்வான். உங்களுக்கு நீங்கள் என்ன விரும்புகிறீரகள் என்பது தெரியும். ஆனால் கிடைத்திருப்பது நீங்கள் விரும்பயதில்லை. ஆனாலும் களைத்து போயிருக்கும் இனத்தின் நிலைமையைச் சிந்தித்து, கொஞ்சம் யோசித்து முடிவுகளைச் செய்யுங்கள்' – என்று கேட்டிருந்தேன்.

பிரபாகரன் செல்வச் சந்நிதி முருகனுக்குப் பூக்கட்டிப் பார்த்து முடிவெடுப்பேன் என்றார். பாலசிங்கம் மார்க்களிய தத்துவங்கள் இருந்தால் ஆண்டவனைப் பற்றிச் சிந்திக்கவில்லை.

பலரது வேண்டுகோளுக்கு இணங்கி, ஒப்புதலுக்காக ஆயுதங்கள் கையளிக்கப்பட்டாலும், நிலைமைகள் திடீரென மாறின. இவை இலட்சியத்திற்காகவோ, அறியாத்தனமா, புலிகளின் திமிரா, அகம்பாவமா என்பது இன்னும் சர்ச்சைகுள்ளானதுதான். வதங்கியது இடைப்பட்ட மக்கள்.


அதே சாயல்தான், கூட்டணியினால் 1982ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில், யாருக்கும் சார்பில்லாத நிலையில் ஒதுங்கி கொண்டிருக்கிறோம் என்று அறிவிக்க மக்கள் ஜே.ஆருக்கு எதிராக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொப்பேகடுவவுக்குப் பெருவாரியாக போட்டார்கள்.

கூட்டணியினரை திராணியவற்றவர்களாக – மக்களின் ஆதரவற்றவர்களாக – ஜே.ஆர். கணித்தார்.

மக்கள் இப்படிச் செய்யலாம் என கணித்த விடுதலை புலிகள், மக்கள் வாக்கு சாவடிகளுக்கு போகக் கூடாது எனத் தடுத்து ரணிலுக்கு வரக்கூடிய வாக்குகளைத் தடுத்து மஹிந்தவின் வெற்றிக்கு வழிதேடி இரை போடும் மனிதருக்கு இரையாகும் வெள்ளாடுகளானார்கள். இப்பொழுது வரப்போகும் ஜனாதிபதித் தேர்தலை சுமந்திரன்தான் ரணிலுக்கு வாக்களிக்க மாட்டோம், கூட்டமைப்பு அப்படி ஒரு தீர்மானம் எடுப்பதையும் தடுப்பேன் எனத் தெரிவித்திருக்கின்றார். அரசியல் அனுபவக் குறைவா, அகங்காரமா, மேதாவித்தனமாக, வெளிச் சக்திகளின் என்பது புரியவில்லை.

காலம்தான் அவருக்கு விடுதலைப் புலிகளுக்கு சொல்லியது போல பதில் வரவேண்டும்.

சஜித் பிரேமதாஸா இப்பொழுதுதான் போட்டியிடப் போவதில்லை என தெரிவித்துள்ளார். அதேசமயம் இதுவரையில் மஹிந்தவின் குட்டையில் ஊறிய அழகப்பெருமவை ஆதரிக்கப் போகிறார் அறிவித்திருக்கின்றார். கூட்டமைப்பு யாருக்கு இப்பொழுது வாக்களிக்க எண்ணும்? அது சரியானது, சந்தர்ப்பவசமானது, இனத்துக்கு அனுசரணையானது, எனக் கருதுகின்ற தலைவர்களாவது தங்களது திராணியில் கருமமாற்ற வேண்டிய



நேரம் இது. ரணிலைப் பற்றிய சிலரின் பார்வையைக் குறிக்கிறேன். தமிழ் மக்கள் எந்தப் பாதையை விரும்புகின்றார்களோ, அதில் தான பயணிக்க வேண்டும் என்ற நியதியோ, விதியோ வராமல் போகலாம். ஆனால் எது அவர்களை அவர்களது திசைக்கு கொண்டு செல்லுமா என்பதை சிந்தித்து முடிவுகள் பெறப்பட வேண்டும்.

**ரணில்**

பொதுவாக சிங்களப் பேரினவாத தலைவர்களிடையே அவர் ஒரு கனவான், அவரை நம்பி காரியங்களை முன்னெடுக்கலாம் என்று அபிப்பிராயங்கள் நாட்டில் மட்டுமல்ல, சர்வதேச பரப்புகளிலும் உண்டு.

ஆனால் அவர் இயங்கிய அரசியல் மட்டங்களில் அவர் குள்ளநரியாகவே பார்க்கப்பட்டார். அவரது சகாக்களிடையே கூட அவர் ஒரு குழந்தை முகம் கொண்ட கொலையாளி (Baby faced killer) என்று அபிப்பிராயங்கள் உண்டு. அவரது தொகுதியில் செயற்பட்டதாகக் கூறப்படும் பட்டலந்தை சித்திரவதை முகாம் படுகொலைச் சம்பவங்களின் விசாரணைகளில் அவரது பங்குபற்றுதல் தொடர்பான குற்றச்சாட்டுகளும் அந்தக் கருத்தை மனித உரிமைகள் ஆர்வலர்களுக்குக் கூட மனதில் ஆழமாகப் பதித்தது.

ரணில் 'ஒரு நாடு, ஒரு தேசம்' என்பதை உறுதியாக நம்புகிறவர். அதற்குத் தாக்கம் தரும் வழியில் எதனையும் செய்வதற்குத் தனது மாமனார் ஜே.ஆர். போன்று எவ்வித தந்திரங்களையும் கடைப்பிடிப்பார். நல்லாட்சி காலம் போல் தமிழ் பகுதிகளைப் பாவித்து, மனித உரிமைகள் மன்றில் தவணைகள் பெற்று, பின் புதிய அரசமைப்பு எனக் காலை வாரியது போல், ஒரு பிரச்சினையை இழுத்தடிப்பதால் அதன் தீவிரம் அற்றுப் போகும் என்ற வழிமுறைகளைக் கடைபிடிப்பவர். இலங்கையின் முதல் பிரதமர் டி.எஸ்.சேனநாயக்காவின் உறவினர். அவரைத் தனது அரசியல் வாழ்வின் பிதாமகனாக வரித்துக் கொண்டவர். டொனமூர் அரசமைப்பின் கீழ் இருந்த அரசமைப்பின் கீழ டி.எஸ்.சேனநாயக்கா காணி மந்திரியாக இருந்தபோது, வடக்கிலும், கிழக்கிலும் இருக்கும் அரச காணிகளிலும் தரிசு நிலங்களிலும் மக்கள் குடியேற்றப்பட்டு, அவை விளை நிலங்களாக்கப்பட வேண்டும் என்ற கம்பளத்தை விரித்து, பிற பிரதேசங்களில் இருந்து பெரும்பான்மை மக்களை குடியிருத்தியவர். தமிழரது பாரம்பரிய பிரதேசங்களில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டு எல்லா மாகாணங்களிலும் இனவாரியான சனத் தொகை சமன்படுத்தப்பட வேண்டும் என்ற கொள்கைகளை வகுத்தவர். அதனையே பாரம்பரியமாக ஜே.ஆரும் ரணிலும் கொண்டுள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியின் ஒவ்வொரு ஆண்டுக் கூட்டத்திலும் பிதாமகரின் கொள்கைகளை வலியுறுத்துவது ரணிலின் வழமை.

நண்பர் கந்தசாமி அதையொட்டி ருசிகரமான சம்பவங்களைக் கூறுவார்.

சந்திரிகாவின் தீர்வு பொதிக்காக அவர், நீலன், ஜி.எல்.பிரீஸ், மற்றையோர் அடிக்கடி சந்தித்து அளவளாவிய நாள்கள். ஜி.எல்.பீரிஸின் முதல் வரைவில் அவர் காணி அதிகாரங்கள் பகிரப்படுவதற்கு ஒப்புதல் தந்திருந்தார். ஆனால் இரண்டாவது வரைவு வந்த போது அதில் காணி அதிகாரங்கள் மத்திய அரசிடமே இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்தார். அதனை ஒட்டி மற்றையோர் அங்கலாய்ப்புப் பட, ஜி.எல்.பிரீஸ் நண்பர் கந்தசாமியிடம் அவரது மற்ற நண்பர்களையும் கூட்டிக்கொண்டு காலை தேநீருக்கு வரக் கேட்டார். மற்றவர்கள் – முக்கியமாக நீலன் – அந்த நேரத்துக்கு வர முடியாதமையால் – நண்பர் கந்தசாமி அவருடன் இருந்த சித்தார்த்தனையும் கூட்டிச் சென்றாராம். அங்கு இந்த மா குற்றங்களை பற்றி விளக்கிய போது, அது ஐக்கிய தேசியக் கட்சியின் அழுத்தங்களிலிருந்து வந்தது, அப்படி காணி அதிகாரப் பரவல் இருந்தால் முழுத் தீர்வுப் பொதியுமே நிராகரிக்கப்படும் என்ற பயமுறுத்தல் தோரணைகளால் இவை நடந்தன என விளக்கினார். ஜி.எல்.பிரீஸ், அவை பற்றித் தான் ரணிலுடன் உரையாடிய போது ரணில் அவை ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுக்குழு தீர்மானம், அதனைத்தான் நடைமுறைப்படுத்துகிறேன் எனவும், தங்களால் முன்னர் நிறைவேற்றப்பட்டிருந்த சமஷ்டி முறையில் தீர்வு வர வேண்டும் என்பதை மீளப் பெற வேண்டும், அதே சமயம் காணி அதிகாரங்கள் மத்திய அரசிடமே இருக்க வேண்டும் என்ற தீர்மானங்களை கட்சியில் முன்மொழிந்து நிறைவேற்றியவரே சேர் பொன்னம்பலம் இராமநாதனின் வழித்தோன்றல் டி.எம்.சுவாமிநாதன் தான் என்ற தகவலையும் தந்தாராம். அதைக் கேட்ட நண்பர் சித்தார்த்தன் அப்படியானால் ரணில் சுவாமிநாதனிடம் பணித்து இது செய்யப்பட்டது என நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள்தானே என்று சொல்ல யாவரும் ஆமோதித்து சிரித்தார்களாம்.

**பாலசிங்கமும் ரணிலும்**

ஜனாதிபதி பிரேமதாஸாவின் காலத்திலிருந்து பேச்சுவார்த்தைகளில் ரணிலோடு இணைந்து பின்னர் சந்திரிகாவின் தீர்வு பொது நாள்களிலும் நோர்வேயின் சமாதானப் பேச்சுகளிலும் அவருடன் தொடர்ந்து ஈடுபாடுகளில் இருந்தவர் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கம். அந்த அனுபவங்களில் அவர் ரணிலை மஹிந்தவிலும் பார்க்க மோசமானவர், தந்திரமான குள்ள நரி எனத்தான் வர்ணித்தார்.

அவரது (பாலசிங்கத்தின்) கருத்துக்களில், இப்பொழுதும் பல பேர் தாங்கள் விடுதலைப் புலிகள் ஜனாதிபதியாக தேர்தலில் ரணில் வர வழி செய்திருந்தால், அவருடன் இன்னும் பேச்சு வார்த்தைகளை நடத்தித் தீர்வைப் பெற்று இருக்கலாம், அவர் ஃபெடரல் அரசமைப்பைத் தந்திருப்பார் எனப் புத்திமதி சொல்லுகிறார்கள், அவர்களுக்கெல்லாம் அவரின் உண்மையான குணாதிசயங்கள் தெரியாது, தனது பேச்சுவார்த்தைக் காலங்களில் தான் அவரோடு பலவாறு அனுபவப்பட்டவன், தீர்வு, தீர்வு என்று சொல்லி எங்களை உலகமெல்லாம் சுற்றி திரிய வைத்தார், ஒரு நம்பிக்கையோடுதான் தாங்களும் போனார்களாம், ஆனால் அவரது தந்திரமோ தங்களை எல்லாம் அப்படி அலைய வைத்து, அவர்கள் சர்வதேசத்தைக் கூட்டி எங்களது ஆயுதங்களைக் களைந்து விட்டு, பல்லைப் பிடுங்கிய பாம்பாக மகுடிக்கு ஆட வைப்பதுதான், பிரபாகரன் அதனைத் தெளிவாகப் புரிந்து இருந்தார், ரணிலுடன் பேசி ஃபெடரல் முறையில் ஒரு தீர்வைப் பெற்று இருக்கலாம் என்று எண்ணுபவர்கள் இருக்கிறார்கள், சமஷ்டி பற்றி நாங்கள் அறியாமல் இல்லை. 57 வருடங்களாக (அவர் கருத்துக்கள் தந்த காலத்தில்) இதனைப் பற்றி நாங்கள் மட்டுமல்ல, செல்வநாயகம் முதற்கொண்டு வந்த தலைவர்கள் எல்லாம் பேசி பேசிக் களைத்துப் போனார்கள். சிங்கள பெரும்பான்மை, அதிலும் ரணில் போன்றோர், ஒன்றுமே தரப் போவதில்லை. ஒரு சின்ன கிராம சபைக்குரிய அதிகாரங்களையே

☞11

## யாழ்ப்பாணம்...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி...)

சிங்கள பேரினவாதம் தர விரும்பவில்லை, அப்படி இருக்கும்போது பேச்சுவார்த்தைகளால் இந்த பேரினவாதம் தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமையுடன், தமிழர் பாரம்பரிய பிரதேசங்களைத் தமிழ்த் தேசமாக ஏற்று, அவர்களை (தமிழர்களை) அரசாணையில் ஏற்றும் என்று நினைத்தால் அவர்கள் கனவு காண்கிறார்கள் என்று உறுதியாகக் கூறினார்.

ரணில் தன்னுடைய ஆழ்மனதில் உறைந்து கிடக்கும் உணர்வுகளையும் தனது பிதாமகர்களுக்காக விசுவாசத்தையும் சந்திரிகாவின் தீர்வு பொதி நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு வந்தபோது வெளிக்காட்டினார். சந்திரிகா அதனை முன்வைத்து நாடாளுமன்றத்தில் பேசியபோது ஐக்கிய தேசியக் கட்சியின் அங்கத்தினர் பலத்த களேபரங்களைச் செய்தனர். அந்த அரசமைப்பு நகலுக்குத் தீமூட்ட தனது பக்கத்தில் இருந்து நெருப்புப் பெட்டியை ரணிலே எடுத்துக் கொடுப்பதை அன்றைய நாடாளுமன்ற நடப்புகளின் வீடியோ சாட்சி சொல்லும். ரணில் புகைப்பிடிக்கும் பழக்கம் அற்றவராதலினால் தீப்பெட்டி முன்னேற்பாட்டில் தயாராகவே வந்திருக்க வேண்டும். 'தன் வினை தன்னைச் சுடும், ஓட்டப்பம் வீட்டை சுடும்' என்றார் பட்டினத்தார். நெருப்பு ரணிலின் வீட்டையும் சுட்டது. ஆனால் அவரின் பேரினவாத மனப்போக்குகளையோ மனக்காட்சிகளையோ சுட்டுள்ளதா? தெரியவில்லை.

தமிழ் மக்களை ஈவிரக்கமின்றிச் சுட்டுத்தள்ள இராணுவத்துக்கு சட்ட எல்லைகளை மீறிய அதிகாரங்கள் தந்த கோட்டா, தனது இன மக்களுக்கு எதிராக, தன்னை ஆதரித்துப் பதவிக்குக் கொண்டு வந்தவர்கள் அவர்கள் என்ற மனக்கிலேசத்தினாலோ என்னவோ அவர்களுக்கு எதிராக கனரக ஆயுதங்களைப் பாவிக்க பணிப்புரைகள் தரத் தயங்கினார். ஆனால் கோட்டா பயணமானதும், அரசு உடமைகள் கிளர்ச்சியாளர்களிடமிருந்து மீளப்படவும், அவர்களுக்கிடையே நாட்டிற்கு எதிரான நாசகார சக்திகள் ஊடுருவியிருக்கிறார்கள் என்றும், இராணுவத்திற்குப் பாரிய நடவடிக்கைகள் எடுக்கும் படியும், சுடவும் உத்தரவுகள் தந்தார். ரணிலின் இந்த வித்தியாசங்களைத்தான் பாலசிங்கம் ரணிலை பற்றிய அபிப்பிராயங்களாகக் கணக்கெடுத்தார்.

ஆதலால் தமிழ் மக்கள் அவர் பதவியேற்றால் எப்படியானவருடன் அதிகாரத்தில் இருக்கும்போது பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டும், அவற்றால் பெற்றுக் கொள்ள கூடிய சாத்திய கூறுகள் என்பவற்றை கணக்கெடுத்தும் தொடர்ந்தும் நிபந்தனைகளை வைத்துக்கொண்டே கானல் தேசம் நோக்கி போவதா எனச் சிந்திக்க வேண்டும்.

ஆனாலும் ரணிலின் பதவியேற்போ, மாற்றுக் கட்சியாளர் ஜனாதிபதியாகி அதிகாரத்தை பெற்று ஆட்சிக்கு வருவதோ ஸ்திரமான நாட்டின் வழமையான அதிகாரம் மாற்றம் இல்லை. இங்கு வங்குரோத்து நிலையில் இருக்கும் பொருளாதாரத்தை மீள கட்டியெழுப்ப வேண்டிய கட்டுப்பாடுகள் உண்டு. அவற்றுக்கு எல்லா இடங்களிலும், சர்வதேசத்தினதும் உதவிகள் தேவை. ஆகவே அந்த கயிறுகளில் ஓரளவாவது தொங்கி, நகர்வுகளை மேற்கொள்ளத் தமிழ் மக்களும் அவர்களின் புலம்பெயரும் சாதுரியமாகக் காய்களை நகர்த்த வேண்டும்.

கிளர்ச்சியாளர்களிடமிருந்து மீளப்படவும், அவர்களுக்கிடையே நாட்டிற்கு எதிரான நாசகார சக்திகள் ஊடுருவியிருக்கிறார்கள் என்றும், இராணுவத்திற்குப் பாரிய நடவடிக்கைகள் எடுக்கும் படியும், சுடவும் உத்தரவுகள் தந்தார். ரணிலின் இந்த வித்தியாசங்களைத்தான் பாலசிங்கம் ரணிலை பற்றிய அபிப்பிராயங்களாகக் கணக்கெடுத்தார்.

ஆதலால் தமிழ் மக்கள் அவர் பதவியேற்றால் எப்படியானவருடன் அதிகாரத்தில் இருக்கும்போது பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டும், அவற்றால் பெற்றுக்கொள்ள கூடிய சாத்திய கூறுகள் என்பவற்றை கணக்கெடுத்தும் தொடர்ந்தும் நிபந்தனைகளை வைத்துக்கொண்டே கானல் தேசம் நோக்கி போவதா எனச் சிந்திக்க வேண்டும்.

ஆனாலும் ரணிலின் பதவியேற்போ, மாற்றுக் கட்சியாளர் ஜனாதிபதியாகி அதிகாரத்தை பெற்று ஆட்சிக்கு வருவதோ ஸ்திரமான நாட்டின் வழமையான அதிகாரம் மாற்றம் இல்லை. இங்கு வங்குரோத்து நிலையில் இருக்கும் பொருளாதாரத்தை மீள கட்டியெழுப்ப வேண்டிய கட்டுப்பாடுகள் உண்டு. அவற்றுக்கு எல்லா இடங்களிலும், சர்வதேசத்தினதும் உதவிகள் தேவை. ஆகவே அந்த கயிறுகளில் ஓரளவாவது தொங்கி, நகர்வுகளை மேற்கொள்ளத் தமிழ் மக்களும் அவர்களின் புலம்பெயரும் சாதுரியமாகக் காய்களை நகர்த்த வேண்டும்.

(தொடரும்)

---

## சுமந்திரனின் நடவடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கையின் ஜனாதிபதி தேர்தல் விடயத்தில் இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளை சம்பந்தப்படுத்திய சுமந்திரன் குறித்து பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடும் சீற்றத்தில் இருக்கின்றார் என்பதை அவர் மூலமே 'காலைக்கதிர்' நேற்று இரவு அறிந்து கொண்டுள்ளது.

நேற்று முன்தினமும் நேற்றும் மாலையும் கூட்டமைப்பு எம்.பிக்கள் 10 பேரினதும் கூட்டம் இரா.சம்பந்தனின் இல்லத்தில் நடைபெற்றது.

இன்று நடைபெறும் ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு வாக்களிப்பது என்ற விவாதம் சூடாக நடைபெற்றது. சம்பந்தன், சுமந்திரன், சாணக்கியன் மூவரும் டலஸ் அழகப்பெருமவுக்கு வாக்களிக்க வற்புறுத்தினர். எனினும் ஏனைய ஏழு பேரும் அதை எதிர்த்தனர். தேவையானால் வாக்களிப்பில் பங்கு பற்றாமல் விலகலாம் என்றனர் அவர்கள்.

இதற்கிடையில் டலஸ் அழகப்பெருமவுக்கு வாக்களிப்பதையே இந்தியா விரும்புகின்றது என்ற தகவலை சம்பந்தன் முதலில் கோடிகாட்டினார் என்று கூறப்படுகின்றது.

எனினும் ஏனையோர் அதை நம்பத் தயாரில்லாத பிரதிபலிப்பைக் காட்டினர். நிலைமை ஒரு பக்கமாகச் செல்கின்றமையை அடுத்து "இது எங்கள் தீர்மானம் அல்ல. இந்தியா இதைத்தான் விரும்புகிறது. இதைச் செய்யும்படி எங்களை கூறுகின்றது. அமெரிக்காவும் இதைத்தான் வற்புறுத்துகிறது. நாங்கள் அதைத்தான் செய்ய வேண்டும்." – என்றார் சுமந்திரன்.

அவரின் பேச்சை ஏனோ மற்றையோர் நம்பவில்லை. அவர் உடனடியாக இந்திய இராஜதந்திர அதிகாரி ஒருவரை தொலைபேசியில் அழைத்தார் எனக் கூறப்படுகின்றது.

"உங்கள் ஆதரவு டலஸுக்குத்தானே. அதனை இவர்களுக்குச் சொல்லுங்கள்!" என்றவாறு தொலைபேசியை செல்வத்திடம் கொடுத்தார் அவர். ஸ்பீக்கர் போனில் பேசினார் செல்வம். 'Vote for Sajith Side' – என்று மறுதரப்பிலிருந்து கூறப்பட்டது.

அதை அடுத்து கூட்டமைப்பின் மற்றைய ஏழு எம்.பிக்களும் அடங்கிப் போயினர்.

அதனைத் தொடர்ந்து சஜித், டலஸ், ஜி.எல்.பீரிஸ் ஆகியோரை அழைத்து எழுத்து மூலம் தாம் கொடுக்கும் கோரிக்கை களுக்கு சஜித் – டலஸ் ஆகியோரின் ஒப்பம்பெறும்நடவடிக்கையை சுமந்திரன் முன்னெடுத்தார்.

இதற்கிடையில் இந்தத் தகவல் பதில் ஜனாதிபதியும் இன்றைய ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்கவுக்கு சில நிமிடங்களில் எட்டியுள்ளது. சுமந்திரன் எந்த இராஜதந்திரிக்கு தொலைபேசி அழைப்பு எடுத்தார் என்ற விவரத்துடன் விடயத்தை சுயாதீன வட்டாரங்கள், செய்தியாளர்கள் மூலம் அவரின் தரப்பு அறிய முற்பட்ட போதே, கூட்டமைப்பின் கூட்டத்தில் நடந்த விடயங்கள் ஊடகத்துக்கு அம்பலத்துக்கு வந்தன.

"நான் நேற்றுத் திங்கட்கிழமை இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருடன் நேரடியாகப் பேசியிருக்கிறேன். அமெரிக்கத் தரப்புடனும் உரையாடி இருக்கிறேன். அவர்கள் இப்படி முடிவு எதையும் எடுக்கவில்லை. இந்தியா என்னை எதிர்க்கிறது, டலசை ஆதரிக்கிறது என்று சுமந்திரன் கூறுவது நொன்சென்ஸ்" – என்று தனது உதவியாளரிடம் சீறி இருக்கிறார் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்பதை உறுதிப்படுத்த முடிந்தது.

இந்த விடயத்தை இந்திய வெளியுறவுத்துறை மட்டத்தில், புது டில்லியில், பெரிய அளவில் எடுப்பதற்கும் ரணில் தீர்மானித்திருக்கிறார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று இரவு ரணில் இந்தியத் தூதுவருடன் தொடர்பு கொள்ள முயன்றார் என்பதை அறிய முடிந்தது. அவர் தொடர்பு கொண்டாரா, என்ன பேசினார் என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை.

---

## கூட்டமைப்பினரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அழகப்பெருமவை ஆதரித்து வாக்களிக்கத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் அதன் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் நேற்றிரவு நடைபெற்றது.

கொழும்பிலுள்ள சம்பந்தனின் இல்லத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தவிசாளர் ஜி.எல்.பீரிஸ், வேட்பாளர் டலஸ் அழகப்பெரும மற்றும் சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா ஆகியோர் கலந்துகொண்டு கூட்டமைப்பினருக்கு வழங்கிய உறுதிமொழியையடுத்தே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் உறுதிப்படுத்தினார்.

---

## விமல், கம்மன்பில...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆதரவாக வாக்களிக்க ஆளுந்தரப்பிலிருந்து வெளியேறிய சுயாதீன நாடாளுமன்றக் குழு தீர்மானித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில மற்றும் வாசுதேவ நாணயக்கார உள்ளிட்ட சுயாதீன உறுப்பினர்கள் குழு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

இதனை விமல் வீரவன்ஸ எம்.பி. ஊடகங்களிடம் நேற்று பகிரங்கமாக அறிவித்தார்.

---

## இலங்கையின் இக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பக்க பதிவொன்றின் மூலம் அவர் இதனை தெரிவித்துள்ளார். அத்துடன், அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவின் அடிப்படையிலேயே இவ்வாறு அமெரிக்கா உதவ முன்வந்துள்ளதாகவும் ஜுலி சங் தெரிவித்துள்ளார்.

---

## நாடாளுமன்றச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிறப்பித்துள்ளது.

முதலிகே வசந்த குமார, கல்வெவ சிறிதம்ம தேரர் மற்றும் பெயரிடப்பட்ட 14 பேருக்கு எதிராக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற வீதிகளில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படுவதால் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படக்கூடும் என வெலிக்கடை பொலிஸார் விடுத்த கோரிக்கைக்கு அமைய நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

இதன்படி, பொல்துவ சந்தியிலிருந்து நாடாளுமன்றத்தின் பிரதான நுழைவாயில் வரையிலான வீதிகளில் ஆர்ப்பாட்டம் நடத்துவதைத் தடுக்கும் வகையில் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

## சு.கவின் 9 எம்.பிக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்று மாலை கட்சி தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது. இதன்போதே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 14 எம்.பிக்களில் ஏற்கனவே நால்வர் அரசுக்கு ஆதரவு வழங்கியுள்ளனர். சாமர சம்பத் தஸநாயக்க ரணிலை ஆதரிக்கும் முடிவை எடுத்துள்ளார். அந்தவகையில் மைத்திரிபால உள்ளிட்ட 9 எம்.பிக்கள் டலஸை ஆதரித்து வாக்களிக்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## மனோ - ஹக்கீம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உறுதிப்படுத்தினார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஐக்கிய மக்கள் கூட்டணியுடன் இணைந்து கூட்டராசாகச் செயற்பட இணங்கியுள்ள டலஸ் அழகப்பெருமவை ஆதரித்து வாக்களிக்கும். இதற்கான தீர்மானத்தை தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைமைக்குழு நேற்று மாலை கொழும்பு நுகேகொடை கட்சித் செயலகத்தில் கூடி முடிவெடுத்தது என்று மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணி என்ற அடிப்படையில், புதிய ஜனாதிபதிப் பதவிக்கான வாக்கெடுப்பில், டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவாக வாக்களிக்க ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கொழும்பில் நேற்று மாலை ஒன்றுகூடித் தீர்மானித்துள்ளது.

கட்சியின் பொதுச்செயலாளர் நிசாம் காரியப்பர் இதனை உறுதிப்படுத்தினார்.

கொழும்பில் நேற்று மாலை ஒன்றுகூடிய ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸும் டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவாக வாக்களிக்க முடிவெடுத்துள்ளது.

---

## ரணிலுக்கே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கப்படும் என்று பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்குமார் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு நேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

---

## வாக்குச் சீட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வற்புறுத்தவோ அல்லது செல்வாக்கு செலுத்தவோ கூடாது எனவும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று பாராளுமன்ற அலுவலகத்திற்கு அறிவித்துள்ளார்.

எந்த வேட்பாளருக்கு வாக்களித்தோம் என்பதை நிரூபிப்பதற்காக நாளை வாக்குச் சீட்டை படம் எடுக்குமாறு சில கட்சித் தலைவர்கள் தங்கள் எம்.பி.க்களுக்கு அறிவித்துள்ளனர் என நேற்று முற்பகல் செய்திகள் வெளியாகின.

நாடாளுமன்ற அலுவல்கள் சபைக் கூட்டத்தில் இவ்விடயம் எழுப்பப்பட்ட போது, சபாநாயகர் அபேவர்தன, ஜனாதிபதித் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 20 ஆவது பிரிவின்படி. 1981 இன் 2, தேர்தலில் வாக்களிக்கும் எம்.பி.க்களை செல்வாக்கு செலுத்துவது அல்லது வற்புறுத்துவது வாக்களிப்பு தொடர்பான விதிகளை மீறுவதாக அமையும் .

இதுஓர் இரகசிய வாக்கெடுப்பு என்பதால், ஓர் எம்.பி. ஒருவரின் வாக்குச்சீட்டை படம் எடுக்க கட்டாயப்படுத்தினால் அவர்களுக்கு ஏழு ஆண்டுகள் நாடாளுமன்றத் தில் அமர்வதற்குத் தடை விதிக்கப்படும் என்றும் சபாநாயகர் அறிவித்துள்ளார்.